பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 19 வியாழக்கிழமை (04-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:345

# பேச்சு நடத்துமாறு அரசுக்கு ஐரோப்பிய சமூகம் அழுத்தம்!

## உதவி வழங்குவது தொடர்பான கூட்டத்தை அதுவரை ஒத்திவைப்பது குறித்தும் ஆராய்வு

கொழும்பு,நவம்பர்4

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களை - காலத்தை இழுத்தடிக்காமல் - விரைந்து ஆரம்பிக்கும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருப்பதாக அறியவருகின்றது.**

**இலங்கைக்கு உதவிகள் வழங்குவது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்றை, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்வரை தள்ளிப்போடுவது என்று முடிவுசெய்வது குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.**

இலங்கை அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமல் இழுபடுவதற்குக் காரணம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தற்போது கருதுவதாகத் தெரிகின்றது.

தமிழர்களின் பிரதிநிதிகள் சிலரை ஒரு சில நாள்களுக்கு முன்னர் சந்தித்த - மேற்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நாடு ஒன்றைச் சேர்ந்த - உயர் இராஜதந்திரி ஒருவர், சமாதான நடவடிக்கையில் இலங்கை அரசின் செயற்பாடு மற்றும் போக்குக் குறித்து விசனமும், எரிச்சலும் தெரிவித்தார் என அறியவந்தது.

ஏதேனும் ஒரு வகையில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே அதனைச் சமாதான மேசைக்கு விரைந்து வரச்செய்யலாம் என்ற எண்ணம் - நிலைப்பாடு - ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடையே வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களுக்கு!

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கென உதயனில் வெளியாகிவரும் வினாத்தாள்களின் வரிசையில் நாளை (05.11.2004) வெள்ளிக்கிழமை கடல் உயிர்வளத் தொழில்நுட்பம் பகுதி I, பகுதி II மற்றும் கணிதம் பகுதி I ஆகிய வினாத்தாள்கள் வெளிவரும். உங்களீ பிரதியை உறுதிபபடுத்துங்கள்.

## இந்தியத் தளபதி வவுனியா விஜயம்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் விஜ் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் அவர், வன்னிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவைச் சந்தித்துப் பேசினார். பின்னர் ஓமந்தை முன்னணிக் காவலரண் பகுதிக்குச் சென்ற அவர், அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் அதிகாரிகளுடனும் பேசினார். வவுனியா விஜயத்தை முடித்துக்கொண்டு புறப்பட்ட தளபதி விஜ், அங்கிருந்து மன்னாருக்குச் சென்றார். அங்குள்ள மிகப்பெரிய இராணுவ முகாமான தள்ளாடியில் இடம்பெற்ற இராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார். இந்திய இராணுவத் தளபதியுடன் அவரது துணைவியார் ரீட்டா விஜ்ஜும் வருகை தந்திருந்தார். அட்டமஸ்கஸ்ஸ பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் சென்ற அவர் அங்கு சிறுவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.(எ-க-6-164)



# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்ட பிரகடனங்கள் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தா!

## விளக்குகிறார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்

லண்டன்,நவ.4

நோர்வேத் தலைநகரான ஒஸ்லோவிலும், ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலும் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளும், அவற்றில் நிறைவெய்திய பிரகடனங்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எவ்வகையிலும் கட்டுப்படுத்தமுடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம். 'ஒஸ்லோப் பிரகடனம்' சம்பந்தமாக பேராசிரியர் பீரிஸ் வெளியிட்ட அறிக்கை பற்றிக் குறிப்பிடும்பொழுது பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உதவி வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவு வழங்கலாம். சமாதானப் பேச்சுக்கள் வாயிலாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இருதரப்பினரையும் ஊக்குவிக்கலாம். ஆனால், அரசியல் தீர்வு எவ்விதம் அமையவேண்டும் என வரையறைகளைத் திணித்துவிடமுடியாது" - என்று பாலசிங்கம் விளக்கினார்.

"டோக்கியோவில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்தனர். எனவே, இம்மாநாட்டில் நிறைவெய்திய தீர்மானங்களைக் கொண்ட பிரகடனம் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தமுடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தனது யோசனைகளை வில்லங்கமாகத் திணித்துவிடும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசு, தனது தோழமை நாடுகளுடன் கூட்டுச்சேர்ந்து, டோக்கியோ மாநாட்டில் பல தீர்மானங்களை நிறைவேற்றியது. சமாதான முயற்சியில் அந்நிய சக்திகள் அநாவசியமாகத் தலையிடுவதாகக் குற்றம் சுமத்தி டோக்கியோப் பிரகடனத்தை ஏற்கனவே நாம் நிராகரித்து விட்டோம். 22 ஜூன் 2003

(16ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் புஷ்!

பெரும் பரபரப்புக்கும், கடும் போட்டிக்கும் மத்தியில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரான ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வெற்றிபெற்றார்.

இந்த வெற்றி மேலும் நான்கு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு அவருக்கு வாய்ப்பைத் தேடித்தந்திருக்கிறது.

தமது தோல்வியைக் கனவான் தனத்தோடு ஒப்புக்கொள்ளும் பகிரங்க அறிக்கையை இலங்கை நேரப்படி இன்று அதிகாலை, ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோன் கெரி விடுக்கவிருந்தார்.



தேர்தலில் வெற்றியீட்டிய ஜோர்ஜ் புஷ்ஷுக்கு நேற்றிரவு ஜோன் கெரி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார். நேற்று கடைசியாக ஒஹியோ மாநில முடிவுகள் வரும்வரை கெரிக்கும், புஷ்ஷுக்கும் இடையில் வெற்றிவாய்ப்பு ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆனால், ஒஹியோ முடிவு வெளியானதை அடுத்து தனது தோல்வியை கெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

# சத்தம் சந்தடியின்றி திடுதிப்பென வடக்கே வந்து திரும்பிய ஆளுநர்!

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன நேற்று யாழ்ப்பாணத்திற்கு இரகசியமாக திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் பலவும கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அவரது யாழ். விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனால், ஆளுநர் யாழ்.வரமாட்டார் என்றே ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் நம்பினர். ஆனால் அவர் நேற்றுக்காலை சத்தம் சந்தடி இன்றி பலாலி விமான நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து பலத்த இராணுவப் பாதுகாப்புடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சட்டத்தரணியை நியமிக்க மீண்டும் அவகாசம் கேட்டார் கோப்ரல் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம்,நவ.4

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்கில் முதலாவது எதிர்மனுதாரரான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆஜராகிய சமயம் தனது தரப்பில் வாதிடுவதற்கு சட்டத்தரணி ஒருவரை நியமிக்க கால அவகாசம் தருமாறு மீண்டும் கோரினார்.

அதனையடுத்து, இது தொடர்பான வழக்குகள் நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டன.

1996 - 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரில் எட்டுப் பேர்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ரூ. 5,000 சம்பள உயர்வுகோரி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,நவ.4

அரச மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவால் உயர்த்துமாறு கோரி நேற்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை 'சம்பள உயர்வுக்கான அரச சேவைகள குழு' ஏற்பாடுசெய்திருந்தது.

அரச மற்றும் தனியார்துறைகளின் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர். சுதந்திர வர்த்தக வலய பொதுச்சேவைகள் தொழிலாளர்கள் சங்கம், அரச காரியாலய ஊழியர் சேவைச் சங்கம், அகில இலங்கை நகரசபை கனிஷ்ட சேவைச் சங்கம், அரச ஐகிய தொழிலாளர் சம்மேளனம், உள்ளூராட்சி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடன் மீளளிப்பு பெறுவோர் விவரம் 03ஆம் பக்கத்தில்

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர் விவரங்களில் ஒரு தொகுதி இன்றைய உதயனின் 3ஆம் பக்கத்தில் வெளியாகியிருக்கின்றது. ஏனையோரின் விவரங்கள் தொடர்ந்து வெளிவரும்.

# காத்தான்குடி மக்கள் 1000 பேர் ஆரையம்பதிக்கு இடம்பெயர்வு

காத்தான்குடியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் அந்த நகரை விட்டு அச்சம் காரணமாக வெளியேறி அருகிலுள்ள ஆரையம்பதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்தோரே வெளியேறி ஆரையம்பதிக்குச் சென்றுள்ளனர். ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் அவர்கள தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் நீராகாரங்கள் ஆரையம்பதி கிராமத்தைச் சேர்நத மக்களால் வழங்கப்பட்டன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மீட்புநிதிச் சான்றிதழைத் தவறவிட்டோர் தமது தெரிவை உறுதிப்படுத்த வசதி

யாழ்ப்பாணம்,நவ.4

தெரிவுசெய்யப்பட்ட நான்கு ஆயிரம் பேருக்கும் தமிழீழ மீட்புநிதியை மீளளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ நிதிப் பொறுப்பாளர் அறிவித்திருக்கின்றார்.

மீளளிப்புச் செய்யத் தெரிவுசெய்யப்பட்டோர் மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டு தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 10 ஆம் திகதி புதன்கிழமை வரை பட்டியலைப் பார்வையிடலாம்.

பார்வையிடும் இடங்கள் வருமாறு:

**06.11.2004 (சனி)**

★ அரசியல்துறைச் செயலகம், மானிப்பாய் காலை 8.30 - 10.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், சண்டிலிப்பாய். மு.ப. 10.30 - 12.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், சுன்னாகம் பி.ப. 12.30 - 2.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், நீர்வேலி பி.ப. 3.30 - 4.30 மணி.

**07.11.2004 (ஞாயிறு)**

★ அரசியல்துறைச் செயலகம், வல்வெட்டித்துறை காலை 8.30 - 10.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், 2 ஆம் குறுக்கு, பருத்தித்துறை மு.ப. 10.30 - 12.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், வதிரி பி.ப. 1.00 - 2.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், வடமராட்சிக் கிழக்கு பி.ப. 3.00 - 3.30 மணி.

**08.11.2004 (திங்கள்)**

★ அரசியல்துறைச் செயலகம், கைதடி காலை 8.30 - 9.30 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், சங்கத்தானை மு.ப. 10.30 - 12.00 மணி.

★ அரசியல்துறைச் செயலகம், நல்லூர் பி.ப. 3.30 - 4.30 மணி.

**09.11.2004 (செவ்வாய்)**

★ அரசியல்துறைச் செயலகம், வேலணை காலை 8.30 - 9.00 மணி.

★ வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் மு.ப. 11.30 - 1.00 மணி.

**10.11.2004 (புதன்)**

★ மத்திய கல்லூரி, கிளிநொச்சி பி.ப. 2.45- 4.00 மணி.

அடையாள ஆவணங்களுடன் குறிப்பிட்ட நேரத்துக்குச் சமுகமளித்து தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

மீட்புநிதிக் கடன் சான்றிதழை தவறவிட்டோர் 2004 ஆம் ஆண்டுக்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றதா என்பதை அறிந்துகொள்வதற்காக இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7 இல் ஆங்கிலமொழி மூல சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையிலான மூன்று நாள்களும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9மணி முதல் நடைபெறும் மேற்படி செயலமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-6)

# ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.4

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களம், யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 101 ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவலகத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரைகணேசமூர்த்தி 'திருகைவேல்' என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (எ-204-5)

# ஓய்வுபெற்ற 13 பல்கலை ஊழியர்கள் நேற்று விருது வழங்கிக் கௌரவிப்பு

யாழ்.பல்கலைக்கழக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற 13 ஊழியர்கள் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் நேற்று விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஓய்வு பெற்றவர்களுக்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் விருது வழங்கிக் கௌரவித்தார்.

2003/2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற கருணானந்தராசா (முதுநிலை தொழில நுட்பவியலாளர்), எஸ்.செல்வராசா (தொழில்நுட பவியலாளர் தரம் I), எஸ்.செல்வராசா (நூலக கவனிப்பாளர் சிறப்புத் தரம்), எஸ்.சண்முகலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் சிறப்புத் தரம்), இ.நடராசா (தொழிலாளி சிறப்புத்தரம்), எஸ்.ஜே.பீ.மூர்த்தி (பதவிநிலை நூலக உதவியாளர்), சி.மாரிமுத்து (தொழிலாளி சிறப்புத் தரம்) -

எஸ்.விஸ்வலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் (சிறப்புத்தரம்), திருமதி த.ஸ்ரீதரன் (எழுதுவினைஞர் தரம் I), என்.ஏ.ஸ்ரீஞானநாதன் (பதவிநிலை எழுதுவினைஞர்), எஸ்.பெருமாள் (சாரதி - தரம் I), ஜே.ஏ.அகஸ்டின் (பாதுகாப்பு உத்தியோகத்தர் உயர்தரம்), ஜே.தெய்வேந்திரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் உயர்தரம்).

ஆகிய 13 பேருமே நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், தமிழ்த்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸ், வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், பல்கலைக்கழ மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் ஆகியோர் இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை வழங்கினர்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-5)






நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஓய்வுபெற்ற ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வின்போது, எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவருக்கு துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் விருதுவழங்குவதை முதலாவது படத்திலும் -

பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*படங்கள்: வசந்தன்*

# சில்லாலைப் பகுதி வீதிகளை புனரமைக்கக் கோரி மகஜர்

வலி.தெற்கு,நவ.4

சில்லாலைப் பகுதியிலுள்ள பல ஒழுங்கைகளும் சிறு வீதிகளும் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வருவதாகவும் -

இவற்றைப் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் -

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் வலி. தென்மேற்குப் பிரதேச சபை செயலாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

சில்லாலை சூசையப்பர் வீதி, செ.ன். ஜேம்ஸ் வீதி, செட்டி குறுக்கு வீதி, கீரியன் தோட்ட வீதி, சுற்று வீதி, லூட்ஸ் வீதி, டச் றோட் குறுக்கு வீதி ஆகிய வீதிகள் கடந்த 20 வருட காலமாகத் திருத்தப்படாமல் இருந்து வருகின்றது.

மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நின்று மக்கள் போக்குவரத்திற்கு பெரும் சிரமமாக இவ் வீதிகள் உள்ளன. குண்டும் குழியுமாக இருந்துவரும் மேற்படி வீதிகளை விரைவில் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இச்சங்கம் அண்மையில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-135)

# கொயிலாமனை எறிகணைத்தளம் அங்கிருந்து அகற்றப்பட்டது

தென்மராட்சி,நவ.4

கொடிகாமம், கொயிலாமனைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த எறிகணைத் தளம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் 50 ஏக்கர் தோட்ட நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த இத் தளமும், முகாமின் பெரும் பகுதியும் இராணுவப் பாதுகாப்பு வேலிகளும் அண்மையில் அகற்றப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொயிலாமனை ஊடாக மந்துவிலுக்குச் செல்லும் வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. முன்னர் இவ்வீதியில் பகல் வேளையில் பாஸ் உள்ளவர்கள் மட்டும் போக்குவரத்துச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

தற்போது இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் அங்கிருந்து வெளியேறியதும் தோட்ட நிலங்களில் இவ்வருடம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

கொயிலாமனையிலிருந்து மந்துவிலுக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்க யாழ். அரச அதிபர் 10 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# சுதந்திரமாகச் செயற்பட தம்மாலோக்க தேரர் தீர்மானம்

கொழும்பு,நவ.4

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் வண. உடுவே தம்மாலோக்க தேரர் தாம் கட்சியிலிருந்து விலகி சுதந்திரமாகச் செயற்படப்போவதாகக் கூறியுள்ளார்.

தமது இந்த முடிவை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஏற்கனவே அறிவித்துவிட்டதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

தேசத்துக்காக தாம் மேற்கொண்டுள்ள பணிகள் முடிவுற்றதும் அரசியலில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாகவும் - அதுவரை சுதந்திரமாகச் செயற்படப்போவதாகவும் அவர்களிடம் தாம் தெரிவித்திருப்பதாக தம்மாலோக்க தேரர் கூறியுள்ளார்.

கட்சியின் உயர்மட்டச் சங்க சபையிலுள்ள மற்றவர்களுடன் சேர்ந்து பணியாற்ற தம்மால் இயலாமலிருப்பதாகவும், ஜாதிக ஹெல உறுமய, சிங்கள உறுமய உறுப்பினர்களிடமிருந்து விலகி நிற்கவேண்டும் என்று தாம் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ப)

# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ள இக் கருத்தரங்கிற்கு பொருத்தமான ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-117)

# படையினருக்குத் தொல்லைகொடுத்த நாய்களில் ஒரு தொகுதி அழிப்பு

தென்மராட்சி,நவ.4

தனங்கிளப்பு படைமுகாமில் படையினருக்குத் தொல்லை கொடுத்துவந்ததாகக் கூறப்படும் நாய்களில் ஒரு தொகுதி நேற்றுக் காலை பிடிக்கப்பட்டது.

இருபதுக்கு மேற்பட்ட நாய்கள் பிடிக்கப்பட்டு, வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வரப்பட்டு சாவகச்சேரி நகரசபையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பிடிக்கப்பட்ட நாய்களுடன் படையினரால் கையளிக்கப்பட்ட நாய்களும் பின்னர் அழிக்கப்பட்டன.

முகாமில் 75 இற்கு மேற்பட்ட நாய்கள் உள்ளதாகவும், அனைத்து நாய்களையும் பிடித்து அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மீட்புநிதி கடன் மீளளிப்பு - 2004

யாழ்ப்பாணம்,நவ.4

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்வதற்கு மேலும் 4 ஆயிரம் பேர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

மீளளிப்புப் பெறத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை தமிழீழ நிதித்துறை நேற்று வெளியிட்டிருக்கிறது.

முற்கொண்டு வெளியிடப்பட்ட பெயர்களில் பிரதேச ரீதியாக ஒரு தொகுதி வருமாறு:-

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| உ/32 | தம்பு சுப்பிரமணியம் |
| உ/37 | சிற்றம்பலம் இராமலிங்கம் |
| உ/108 | கணபதிப்பிள்ளை சண்முகநாதன் |
| உ/138 | கார்த்திகேசு ஐயம்பிள்ளை |
| உ/149 | கந்தையா நடராசா |
| உ/192 | செல்வி குமுதினி ஐயாத்துரை |
| உ/227 | நாகநாதர் பொன்னம்பலம் |
| உ/297 | சின்னப்பு அரசஇரத்தினம் |
| உ/303 | வாஞ்சீஸ்வரக்குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள் |
| உ/330 | இராசையா செல்லத்துரை |
| உ/335 | சண்முகம் சிவகுருநாதர் |
| உ/432 | கதிரவேலு சண்முகநாதன் |
| உ/462 | எல்லுப்போலை செல்லத்துரை |
| உ/492 | மார்க்கண்டு கணேசமூர்த்தி |
| உ/505 | சின்னப்பு இரத்தினம் |
| உ/535 | இளையதம்பி நவரெட்ணம் |
| உ/546 | இளையதம்பி ஐயாத்துரை |
| உ/604 | இராமலிங்கம் அம்பலவாணர் |
| உ/642 | தம்பையா கனகசபாபதி |
| உ/667 | செல்லத்துரை கணேசரட்ணம் |
| உ/715 | கந்தையா இராசரத்தினம் |
| உ/726 | கந்தர் இராசதுரை |
| உ/746 | வேலாயுதர் செல்லையா |
| உ/747 | மயில்வாகனம் சோமசுந்தரம் |
| உ/772 | முருகேசு சங்கரப்பிள்ளை |
| உ/777 | கார்த்திகேசு செல்லத்துரை |
| உ/788 | சின்னத்தம்பி செல்லப்பா |
| உ/821 | சங்கரப்பிள்ளை வினாசித்தம்பி |
| உ/827 | கனகசபை வேலுப்பிள்ளை |
| உ/834 | முருகேசு அய்யாத்துரை |
| உ/840 | நாகலிங்கம் இராசையா |
| உ/901 | திருமதி. செல்லம்மா நாகரத்தினம் |
| உ/930 | திருமதி. இராசம்மா தம்பாப்பிள்ளை |
| உ/1012 | சுவாமிநாதர் பொன்னம்பலம் |
| உ/1055 | திருமதி. கனகம்மா விசுவலிங்கம் |
| உ/1065 | கந்தையா மயில்வாகனம் |
| உ/1086 | இம்மானுவேல் ஸ்ரனிஸ்லோஸ் |
| உ/1131 | குட்டியர் குருநாதன் |
| உ/1145 | முருகேசு நாகலிங்கம் |
| உ/1158 | முருகன் சின்னட்டி |
| உ/1165 | சின்னத்தம்பு கனகசபை |
| உ/1180 | வரப்பிரகாசம் யோசேப்பு அருமைநாயகம் |
| உ/1187 | செல்வி. ஜெயவதனா சுப்பிரமணியம் |
| உ/1199 | பொன்னுச்சாமி கந்தசாமி |
| உ/1211 | வீரசிங்கம் நவரத்தினம் |
| உ/1222 | சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி |
| உ/1225 | வேலுப்பிள்ளை சின்னையா |
| உ/1253 | மார்க்கண்டு கந்தையா |
| உ/1261 | மூத்தப்பு நடராசா |
| உ/1268 | அப்பாப்பிள்ளை இராமலிங்கம் |
| உ/1276 | சண்முகம் சச்சிதானந்தசிவம் |
| உ/1286 | வேலாயுதர் சோதிநாகரத்தினம் |
| உ/1304 | முருகேசு இரத்தினம் |
| உ/1305 | திரு. ஆறுமுகம் இராசு |
| உ/1317 | நாகமணி கந்தையா |
| உ/1397 | விக்டர் கனகசுந்தரம் |
| உ/1407 | சண்முகம் முத்துச்சாமி |
| உ/1422 | முருகேசு நடராசா |
| உ/1426 | சோமநாதன் நாகலிங்கம் |
| உ/1441 | வல்லிபுரம் பொன்னுச்சாமி |
| உ/1444 | திருமதி. பாக்கியம் இராசையா |
| உ/1446 | திருமதி. பாக்கியம் பொன்னையா |
| உ/1449 | சிற்றம்பலம் பொன்னுத்துரை |
| உ/1460 | திருமதி. இராசம்மா சந்திரசேகரம்பிள்ளை |
| உ/1462 | திருமதி. இரத்தினம்மா சின்னப்பு |
| உ/1488 | முருகேசு செல்லக்கண்டு |
| உ/1514 | அம்பலவாணர் செல்லத்துரை |
| உ/1527 | திருமதி. தெய்வானை வேலுப்பிள்ளை |
| உ/1553 | நல்லையா விஜயரத்தினம் |
| உ/1555 | கந்தையா வைத்திலிங்கம் |
| உ/1587 | கனகரத்தினம் பாலச்சந்திரன் |
| உ/1597 | திருமதி. பாக்கியரத்தினம் முருகேசு |
| உ/1599 | வேதவனம் மார்க்கண்டு |
| உ/1601 | திரு. கணபதிப்பிள்ளை மயில்வாகனம் |
| உ/1607 | சின்னையா நல்லதம்பி |
| உ/1612 | பொன்னையா நாகராசா |
| உ/1630 | சுப்பிரமணியம் இராசரத்தினம் |
| உ/1684 | சுப்பையா திருநாவுக்கரசு |
| உ/1747 | வல்லிபுரம் நாகநாதர் |
| உ/1776 | அப்பாத்துரை சிதம்பரப்பிள்ளை |
| உ/1779 | திருமதி. செல்லம்மா பாலசுப்பிரமணியம் |
| உ/1780 | தாமோதரம்பிள்ளை செல்லத்துரை |
| உ/1791 | சீனிக்குட்டி சபாரத்தினம் |
| உ/1810 | முருகேசு சின்னையா |
| உ/1822 | சின்னத்தம்பி தர்மராஜன் |
| உ/1828 | இளையதம்பி விக்கினராசா |
| உ/1830 | தாமோதரம்பிள்ளை வன்னித்தம்பி |
| உ/1837 | பொன்னையா அப்பாச்சிப்பிள்ளை |
| உ/1857 | வேலாயுதபிள்ளை ஞானஸ்கந்தா |
| உ/1885 | குமாரசாமி கனகரத்தினம் |
| உ/1906 | வைரமுத்து மயில்வாகனம் |
| உ/1926 | தம்பையா நடராசா |
| உ/1962 | மருதகுட்டி இராசசிங்கம் |
| உ/1987 | கணபதிப்பிள்ளை செல்லத்துரை |
| உ/2013 | முத்து சுப்பிரமணியம் |
| உ/2095 | மூத்ததம்பி ஆறுமுகம் |
| உ/2130 | வீரவாகு கணிதசிங்கம் |
| உ/2189 | கந்தையா செல்லையா |
| உ/2191 | கந்தையா சொக்கலிங்கம் |
| உ/2242 | சீனியர் வல்லிபுரம் |
| உ/2247 | காசிப்பிள்ளை வல்லிபுரம் |
| உ/2290 | சரவணமுத்து கனகசபை |
| உ/2294 | திருமதி. பரமேஸ்வரி சின்னத்தம்பி |
| உ/2295 | சுப்பிரமணியம் பாலகுமார் |
| உ/2363 | பொன்னையா நல்லையா |
| உ/2385 | சின்னப்பா கணபதிப்பிள்ளை |
| உ/2397 | கதிரன் நாகமுத்து |
| உ/2404 | சின்னப்பா சின்னத்தம்பி |
| உ/2450 | கைலாசபிள்ளை சிவபாதம் |
| உ/2452 | பொன்னையா ஐயம்பிள்ளை |
| உ/2489 | முத்துத்தம்பி இரத்தினம் |
| உ/2502 | முத்தையா பாலசுப்பிரமணியம் |
| உ/2516 | செல்வி ஞானமலர் செல்லையா |
| உ/2541 | சிவக்கொழுந்து அழகப்பெருமாள் |
| உ/2545 | நாகலிங்கம் கணேசபிள்ளை |
| உ/2555 | கந்தர் செல்லத்துரை |
| உ/2556 | வயிரவன் சின்னத்தம்பி |
| உ/2593 | சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன் |
| உ/2648 | சின்னையா சிதம்பரப்பிள்ளை |
| உ/2649 | தம்பையா பாலசிங்கம் |
| உ/2654 | செல்வி சந்திரவதி சரவணமுத்து |
| உ/2697 | சுப்பையா அழகரத்தினம் |
| உ/2766 | மயில்வாகனம் முத்துத்தம்பி |
| உ/2780 | தம்பிப்பிள்ளை இராசையா |
| உ/2794 | வேலாயுதம் நல்லதம்பி |
| உ/2816 | திருமதி அன்னலட்சுமி சின்னத்தம்பி |
| உ/2820 | திருமதி மகேஸ்வரி கந்தையா |
| உ/2826 | கந்தையா தங்கராசா |
| உ/2880 | அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி |
| உ/2934 | திருமதி ஜெயம் முருகேசு |
| உ/2945 | திருமதி தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம் |
| உ/2968 | வயித்திலிங்கம் இராசரத்தினம் |
| உ/2984 | செல்லையா சங்கரப்பிள்ளை |
| உ/3013 | கணவதிப்பிள்ளை சோமசுந்தரம் |
| உ/3106 | சுப்பர் மார்க்கண்டு |
| உ/3159 | முருகேசு சுப்பிரமணியம் |
| உ/3192 | நாகலிங்கம் சுப்பிரமணியம் |
| உ/3222 | பண்டாரி ஆறுமுகம் |
| உ/3236 | மார்க்கண்டு மகாதேவன் |
| உ/3252 | சுப்பையா செல்லத்துரை |
| உ/3262 | தில்லையம்பலம் ஐயாத்துரை |
| உ/3286 | வேலாத்தை சின்னத்துரை |
| உ/3297 | திருமதி அன்னம்மா தம்பிமுத்து |
| உ/3329 | திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் |
| உ/3354 | செல்லப்பா அப்பையா |
| உ/3366 | திருமதி சீவரத்தினம் காசியர் |
| உ/3474 | சண்முகம் முத்தையா |
| உ/3475 | திருமதி அன்னமுத்து பொன்னையா |
| உ/3506 | சின்னையா இரத்தினம் |
| உ/3511 | பொன்னையா சிவநாதபிள்ளை |
| உ/3537 | கந்தையா சுப்பிரமணியம் |
| உ/3543 | திருமதி ஜெகதீஸ்வரி சின்னையா |
| உ/3549 | வல்லிபுரம் மயில்வாகனம் |
| உ/3559 | திருமதி மகேஸ்வரி சொர்ணலிங்கம் |
| உ/3642 | தம்பிப்பிள்ளை இராசையா |
| உ/3649 | வல்லிபுரம் கணபதிப்பிள்ளை |
| உ/3681 | சினனத்தம்பி மார்க்கண்டு |
| உ/3682 | திருமதி மகேஸ்வரி நடராசா |
| உ/3702 | திருமதி தங்கம்மா ஆறுமுகம் |
| உ/3797 | சீனிவாசகம் பொன்னுத்துரை |
| உ/3814 | தம்பிராசா சிவேஸ்வரன் |
| உ/3817 | கந்தையா செல்லத்துரை |
| உ/3821 | திருமதி. சிவபாக்கியம் நடராசா |
| உ/3859 | திருமதி சின்னம்மா வேலுப்பிள்ளை |
| உ/3895 | பேதுரு அருளப்பன் |
| உ/3900 | திருமதி சிவபாக்கியம் சின்னத்தம்பி |
| உ/3908 | இளையதம்பி திருநாவுக்கரசு |
| உ/3916 | கந்தையா நடராசா |
| உ/3941 | திருமதி பொன்மணி வினாசித்தம்பி |
| உ/4025 | சிவசுப்பிரமணியம் சிவஞானம் |
| உ/4031 | வடிவேலு ரமணன் |
| உ/4172 | சின்னத்தம்பி தம்பிராசா |
| உ/4173 | திருமதி மாசிலாமணி இராசமணிக்கம் |
| உ/175 | யோகவனம் அமிர்தானந்தர் |
| உ/4179 | அண்ணாமலை தவராசா |
| உ/4245 | அம்பலவாணர் சுப்பிரமணியம் |
| உ/4254 | திருமதி இராஜேஸ்வரியம்மாள் சோமசர்மா |
| உ/4296 | கந்தையா சின்னப்பா |
| உ/4299 | செல்லத்தம்பி அருமைநாயகம் |
| உ/4376 | வில்பிறட் அருள்ராஜ் அல்பொன்சஸ் |
| உ/4377 | சண்முகம் குணரத்தினம் |
| உ/4412 | செல்லப்பா அருளானந்தம் |
| உ/4625 | கதிரவேலு கந்தையா |
| உ/4631 | சுப்பையா கந்தசாமி |
| உ/4658 | கனகர் அம்பலவாணர் |
| உ/4678 | திருமதி சின்னாச்சிப்பிள்ளை கனகசபை |
| உ/4787 | திருமதி நாகம்மா தம்பிராசா |
| உ/4795 | திருமதி தவமணி பாலகுலேந்திரன் |
| உ/4810 | விசுவலிங்கம் நவரத்தினம் |
| உ/4844 | இளையதம்பி செல்லையா |
| உ/4899 | திருமதி பூபதி நடராசா |
| உ/4964 | தம்பர் இராசா |
| உ/4967 | கந்தையா ஞானச்செல்வம் |
| உ/4994 | சுப்பையா இராசையா |
| உ/5006 | திருமதி மகாலஷ்மி குமாரதாசன் |
| உ/5007 | முத்தையா இராமையா |
| உ/5044 | திருமதி பார்வதிப்பிள்ளை இராசலிங்கம் |
| உ/5045 | திருமதி சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி |
| உ/5056 | திருமதி தங்கம்மா இராசையா |
| உ/5065 | சிவகுரு ஆறுமுகம் |
| உ/5076 | கணபதிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை |
| உ/5102 | திருமதி கனகசபை பொன்னம்மா |
| உ/5104 | கார்த்திகேசு நன்னித்தம்பி |
| உ/5128 | நன்னித்தம்பி சுப்பையா |
| உ/5153 | திருமதி நாகம்மா சின்னத்துரை |
| உ/5162 | முருகேசு வல்லிபுரம் |
| உ/5165 | சின்னையா சிவராமலிங்கம் |
| உ/5181 | முருகன் பாலு |
| உ/5216 | திருமதி புனிதவதி இராமலிங்கம் |
| உ/5220 | மயில்வாகனம் பரமலிங்கம் |
| உ/5249 | திருமதி நல்லம்மா ஜெகநாதன் |
| உ/5329 | திருமதி அன்னப்பிள்ளை சுப்பையா |
| உ/5349 | திருமதி சற்குணம் சிவப்பிரகாசம் |
| உ/5361 | செல்வி நாகம்மா பொன்னம்பலம் |
| உ/5362 | திருமதி சிந்தாமணி தம்பிராசா |
| உ/5376 | திருமதி பரிமளம் குமாரசாமி |
| உ/5418 | சுப்பிரமணியம் தர்மலிங்கம் |
| உ/5436 | நல்லையா ஞானப்பிரகாசம் |
| உ/5458 | கந்தர் குழந்தைவேல் |
| உ/5505 | சிவகுரு வையாகுருநாதன் |
| உ/5534 | செல்வி கிருபா இராசையா |
| உ/5538 | கந்தர் முத்துச்சாமி |
| உ/5563 | கந்தையா சின்னத்துரை |
| உ/5653 | திருமதி தனலஷ்மி வயிரவிப்பிள்ளை |
| உ/5662 | இராசாசலமன் அருளானந்தம் |
| உ/5668 | கிட்டிணர் பொன்னையா |
| உ/5681 | தம்பிப்பிள்ளை செல்லத்துரை |
| உ/5715 | சுப்பையா குமாரசுவாமி |
| உ/5748 | முத்தர் வேலாயுதபிள்ளை |
| உ/5756 | வேலுப்பிள்ளை கந்தையா |
| உ/5807 | இராமு தம்பிராசா |
| உ/5819 | வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| உ/5916 | சரவணைமுத்து இளையதம்பி |
| உ/5922 | கந்தையா மாணிக்கவாசகர் |
| உ/5937 | திருமதி வள்ளிப்பிள்ளை துரையப்பா |
| உ/5967 | சரவணமுத்து ராஜா |
| உ/5969 | ஆறுமுகம் பொன்னுத்துரை |
| உ/6026 | மயில்வாகனம் பரமலிங்கம் |
| உ/6045 | ஏரம்பு சின்னத்துரை |
| உ/6099 | திருமதி கனகாம்பிகை நல்லையா |
| உ/6104 | கந்தையா சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை |
| உ/6125 | திருமதி மனோன்மணி நாகலிங்கம் |
| உ/6148 | திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா |
| உ/6199 | கந்தன் கதிரன்(கதிரிப்பிள்ளை) |
| உ/6201 | திருமதி அன்னபூரணம் செல்லத்துரை |
| உ/6297 | திருமதி சரஸ்வதி பெரியதம்பி |
| உ/6358 | கந்தையா சுப்பையா |
| உ/6387 | முருகன் கதிரவேலு |
| உ/6406 | சின்னத்தம்பி பொன்னையா ஐயாத்துரை |
| உ/6423 | சின்னப்பா கந்தையா |
| உ/6494 | சுப்பையா நல்லதம்பி |
| உ/6604 | இளையவி சிவனடியார் |
| உ/6607 | தியோகு லூக்காஸ் |
| உ/6693 | வைரமுத்து பேரம்பலம் |
| உ/6749 | மயில்வாகனம் துரைசிங்கம் |
| உ/6763 | திருமதி விசாலாட்சி பொன்னுத்துரை |
| உ/6765 | சின்னத்துரை சிவராசசிங்கம் |
| உ/6766 | பொன்னையா நாகலிங்கம் |
| உ/6790 | திருமதி. சீவனாயகம் செல்லத்துரை |
| உ/6802 | நாகலிங்கம் தம்பிராஜா |
| உ/6815 | திருமதி மகேஸ்வரி வீரவாகுதேவர் |
| உ/6826 | திருமதி பூரணம் இரத்தினம் |
| உ/6828 | திருமதி தங்கராணி விமலநாதன் |
| உ/6829 | திருமதி பூரணம் வேலுப்பிள்ளை |
| உ/6899 | வைத்திலிங்கம் கந்தசாமி |
| உ/6901 | சின்னத்தம்பி செல்லப்பா |
| உ/6907 | திருமதி சரஸ்வதி இராசரத்தினம் |
| உ/6914 | திருமதி இலட்சுமி காசிப்பிள்ளை |
| உ/6917 | திருமதி நல்லபிள்ளை கந்தையா |
| உ/6929 | தம்பையா அருளப்பா |
| உ/6968 | வல்லிபுரம் துரையப்பா |
| உ/6992 | திருமதி மங்கையற்கரசி முத்தையா |
| உ/7008 | தம்பிப்பிள்ளை நாகலிங்கம் |
| உ/7012 | கந்தையா கணபதிப்பிள்ளை |
| உ/7035 | சண்முகம் பொன்னுத்துரை |
| உ/7104 | இராசா செல்வரத்தினம் |
| உ/7143 | பொன்னையா ஐயாத்துரை |
| உ/7146 | தம்பு தம்பித்துரை |
| உ/7147 | திருமதி அன்னப்பிள்ளை வைத்திலிங்கம் |
| உ/7163 | முத்துசாமிக்குருக்கள் சாரங்கபாணிஐயர் |
| உ/7193 | அம்பலவாணர் நவரத்தினம் |
| உ/7221 | சண்முகலிங்கம் சிவக்கொழுந்து |

(தொடரும்)



## ஆசிரிய சேவையில்

# பதவியுயர்வுகள் வழங்கப்படுவதற்கு முன்னர் அமைச்சரவை மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம்,நவ.4

இலங்கை ஆசிரியர் சேவையை நடைமுறைப படுத்தும்போது அதிலுள்ள குறைபாடுகள் குறித்து நிலையியல் குழுவினருடனும் தொழிற சங்கங்களுடனும் கலந்துரையாடிய பின்பு அமைச்சரவை மூலம் திருத்தங்கள் மேற்கொள ளப்பட்டு பதவியுயர்வுகள் வழங்கப்படும்.

- கடந்த மாதம் கல்வி அமைச் சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சுக் களின்போது இந்த முடிவு எட்டப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் பேர்ட்டி பி.இரணவீரகே தலைமையில் கல்விச் சேவை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்ட மைப்பு இப்பேச்சுக்களை ஏற்பாடு செய்திருந்தது.

பேச்சுக்களின்போது கலந்துரையாடப்பட்ட மேலும் சில விடயங்கள் வருமாறு:

★ பயிலுநர் ஆசிரியர்களில் இன்னும் வகுப்பு 3-II இற்கு உள்வாங்கப்படாதவர் களை உள்வாங்க நடவடிக்கை எடுத்தல்.

★ ஆசிரியர் சேவை பதவி உயர்வுக்கான கால எல்லையை 31.12.2004 வரை நீடித்து, அதன்பின்னர் பதவியுயர்விற்கு புள்ளி அல் லது சேவைக் காலத்தை எடுப்பதுதொடர் பாகக் கலந்துரையாடி முடிவு எடுத்தல்.

★ கல்விக் கல்லூரிப் பயிற்சியை முடித்த வர்கள் வெளிவாரிப் பட்டப்படிப்பைத் தொடர வதற்கு சுற்றறிக்கையில் உள்ள குறைகளை நீக்கச் சிபார்சு செய்தல்.

★ பி.சி.பெரேரா சம்பள ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகளைத் திஸ்ஸ தெய்வேந்திர குழுவின் அறிக்கை வெளியான பின்பு கலந்துரையாடுதல்.

★ மொனராகலை, தெஹியோவிட்ட, மத் துகம ஆகிய பிரதேசங்களில் நடைமுறைப் படுத்தப்படும் வசதிகுறைந்த பிரதேச பாட சாலைகளை வகைப்படுத்தும் செயற்றிட்டதை ஏனைய வலயங்களிலும் நடைமுறைப்படுத்த ஒழுங்குகள் செய்யப்படும்.

★ தேசிய பாடசாலைகளுக்கு அதிபர் களை நியமிப்பதில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு தகுதி உள்ளவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

★ அரசசேவை ஆணைக்குழுவுடன் கலந் துரையாடித் தமிழ் அதிகாரிகளை நியமிப் பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சகல சுற்றறிக்கைகளையும் ஏககாலத்தில் தமிழிலும் வெளியிட்டு சகல அதிகாரிகளுக்கும் காரியால யங்களுக்கும் கிடைக்கச் செய்வதாகத் தீர் மானிக்கப்பட்டது.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடத்தை நிவர்த்தி செய்ய இறுதி யாக நடைபெற்ற பரீட்சைப் பெறுபேற்றை வெளியிட்டு ஆள்சேர்ப்பு செய்வதெனவும், 2004 ஆம் வருடத்தில் நடத்தப்பட இருந்த பரீட்சை யில் இருந்து எத்தனை பேரைத் தெரிவு செய்யவேண்டும் எனக் கணக்கிட்டு அவ்வறிக் கையைச் சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டது. இவ்வறிக்கை கிடைத்ததும் ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப் படும்.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையை ரத்துச்செய்திருந்தால் அப்பரீட் சைக் கட்டணத்தை மீளளித்தல் அல்லது அப் பரீட்சார்த்திகளை இனிவரும் பரீட்சைக்குக் கட் டணம் இன்றித் தோற்ற அனுமதித்தல்.

(10-202)

## மாவீரர் குடும்பங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

கரவெட்டி பிரதேசத்திலுள்ள மாவீரர் குடும் பங்கள் தங்கள் பெயர் விவரங்களைக் கரவெட் டியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல துறை அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளு மாறு கரவெட்டி தேசிய எழுச்சிப்பேரவை கேட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கரவெட்டி விக் னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ள கர வெட்டி பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு தொடர்பாகவே இவ்விவரங்களைப் பதிவுசெய்யக்கோருவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (10-70-173)

# எம். ஜி. ஆர். முன்னேற்றக்கழகம் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு

வலி.தென்மேற்கு,நவ.4

பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர். முன்னேற றக் கழகம் மாவீரர் வாரத்தைச் சிறப்பாக அனுஷ் டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின் றது. இம்மாதம் 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதி களில் சில்லாலை, சாந்தை காவேரி பொது விளையாட்டு மைதானத்தில் மாவீரர் நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு எழுச்சிபூர்வமாக மாவீ ரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

இம்மாதம் 26 ஆம் திகதி தேசியத் தலை வர் பிரபாகரனின் 50 ஆவது அகவையை முன னிட்டு முன்னேற்றக் கழகத்தினர் பொதுமக்க ளுக்கு குளிர்பானங்கள், கேக், இனிப்பு ஆகிய வற்றை வழங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் என்று பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர். முனனேற்றக் கழகத்தினர் தெரிவித்தனர்.

(10-135)

# நவம்பர் முழுவதும் பெருவிழா மாதமாக தொழில்நுட்பக்கல்லூரி சமூகம் பிரகடனம்

யாழ்ப்பாணம்,நவ.4

தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாக ரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். தொழில்நுட்பக் கல்லூரிச் சமூகத்தினால் நவம் பர் மாதம் தமிழர் பெருவிழா மாதமாகப் பிர கடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முற் பகல் 11 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல் லூரியில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக் கினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் பொதுச சுடரினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன், யாழ்.மாவட்ட அர சியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்ம ணன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் கல்லூரி அதிபர் உரையாற்றும் போது, எமது தலைவர் பொன்விழாவில் கால் பதிக்கும் இவ்வேளையில் சர்வதேச அரசிய லிலும் தனது கவனத்தைச் செலுத்தி உலக சமாதானத்திற்குப் பாடுபடும் மாபெரும் தலைவ ராக விளங்கவேண்டும்.

இப்பொன்விழா நிகழ்வில் எமது கல்லூரிச் சமூகம் சார்பில் சிறு நிதியினைத் திரட்டி மக்க ளின் துயர் துடைப்பதற்கெனக் கையளிக்கின் றோம். இந்நிதி வறிய மக்களிற்குப் பயன் படவேண்டும்.

எமது தலைவர் உலக சமாதானத்தில் பங்கெடுத்து சமாதானத்திற்கான நோபல் பரி சைப் பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் தேசியத் தலைவருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றினைத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர், அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணனிடம் கைய ளித்தார்.

தொடர்ந்து தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென ஒரு தொகைப் பணம் கல்லூரி அதிபரால் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்.மாவட்ட அர சியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்ம ணன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

(ஐ-10-202)

# யாழ். கல்வி வலயத்தின் திருக்குறள் மனனப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ். கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய் யப்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர் களுக்கான திருக்குறள் மனனப்போட்டி வல யப் பணிமனையில் நேற்றுமுன்தினம் ஆரம்ப மாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டி யில் முதல் இரண்டு தினங்களும் பெரும் எண் ணிக்கையான மாணவர்கள் பங்குபற்றியுள்ள னர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிநாள் போட்டி இன்று காலை யாழ். கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஏற்கனவே பங்குபற்றத் தவறிய மாணவர்களும் புதிய மாணவர்களும் பங்குபற்றலாம் என்று போட்டி அமைப்பாளர் உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் தெரிவித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள் ஆர் வத்துடன் பங்குபற்றியமையால், தற்போது தெரிவுசெய்யப்படும் மாணவர்கள், இறுதிப் போட்டியில் பங்குபற்றவேண்டும் எனவும் - அதில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - 1330 திருக்குறள்களையும் ஒப்புவிப்பவர்களுக்கு 25ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்குவதற்கு ஓர் அன்பர் முன்வந்துள்ளார். விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள திருக்குறள் மாநாட்டில் வைத்து வெற்றி பெறு பவர்களுக்கான சான்றிதழும், பரிசில்களும் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர் மேலும் தெரிவித்தார். (10-12)

# நாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.4

நாவலர் குருபூசையை முன்னிட்டு மானிப் பாய் இந்துசமயவிருத்திச் சங்கம் பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளது.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை மாண வர்களுக்கு இடையே மட்டும் இப்பேச்சுப் போட்டி இடம்பெறவுள்ளது.

· விண்ணப்பங்களை மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஜெ.கோகலே, செயலாளர் இ.ச.வி.சங் கம், கிள்வுள்வில்லா, நவாலி தெற்கு, மானிப் பாய் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கு மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் இந்துசமய விருத்திச்சங்கப் பாலர் பாடசாலையில் இடம்பெறும்.

பேச்சுப்போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு நாவலர் குருபூசை தினத்தன்று பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (10-85)

## நல்லூர் பெருந்திருவிழாவில்

# அடியார்கள் தவறவிட்ட பொருள்கள் சனிக்கிழமை ஒப்படைக்கப்படும்

வலி.வடக்கு,நவ.4

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவின்போது அடியார்களினால் கண்டெடுக்கப்பட்டு ஆலய வீதியில் அமைந்திருந்த சிறப்புச் செயலணி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பொருள் கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் வைமன் வீதியில் அமைந் துள்ள நல்லூர் கோட்ட அரசியல் பணிமனை யில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வுள்ளன.

அடியார்களால் தவறவிடப்பட்ட தங்கநகை கள், பணப்பைகள், கைக்கடிகாரங்கள், கைய டக்கத் தொலைபேசி, அடையாள அட்டைகள் என்பன இவற்றில் அடங்கும்.

பொருள்களைத் தவறவிட்ட அடியார்கள் உரிய அடையாளங்களைக் காட்டிப் பொருள் களைப் பெற்றுக்கொள்ளும்படி சிறப்புச் செய லணியினர் கேட்டுள்ளனர். (10-86)

UNIT

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT&T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல், படியாக சகல கணனி விற்பனை மற்றும் பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பு ஏற்படுத்துதல் மென்பொருள் உற்பத்தி, கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

- எவராலும் தீர்க்க முடியாத கணனிப் பிரச்சினைகளை பழுது பார்த்தல், நீக்குதல்
- சகல விதமான கணனிகளின் பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்
- Cisco நிறுவனத்தின் அனுமதி பெற்ற வலையமைப்புக்கள் மற்றும் திருத்தங்கள்
- LAN, WAN, MAN வலைப் பின்னலமைப்புகள், பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்

இன்னும் பல .....

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor

Attractive Opening Offer each Computer purchase has

★ Computer Table ★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

விசேட சலுகைப் பொதிகள் கொழும்பு விலையில்

- புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல் மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

We delivers cheap & the best products Because We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

உதயன்

# அகாஷி வக்காலத்து வாங்குவது எதற்காக?

இலங்கைக்கு எட்டாவது தடவையாக விஜயம்செய்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி, இம்முறை தமது ஆறு நாள் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா புறப்பட்டுள்ளார்.

இப்போதைய விவகாரங்களில் அவர் கொழும்பில் தெரிவித்த கருத்துக்கள் தமிழர் தரப்பை விசனத்துக்குள் ஆழ்த்தியிருப்பது சுட்டிக்காட்டப்படவேண்டியது.

சமாதான முயற்சிகளுக்கு உதவும் சர்வதேச நாடு என்ற முறையிலும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முன்னணியில் இருக்கும் தேசம் என்ற முறையிலும் இலங்கை விடயத்தில் ஜப்பானுக்கும் அதன் சார்பில் அதன் விசேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் இலங்கை விடயத்தில் கணிசமான பங்கு உண்டு. அவரது கரிசனையை - பங்களிப்பை - இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருமே நட்புறவோடுதான் வரவேற்கின்றார்கள்.

ஆனால், அதற்காக அவர் இலங்கை சமாதான முயற்சி விடயத்தில் எல்லை மீறுபவராகக் (Over Steping) கருத்துக் கூறக்கூடாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் குறித்து அவர் கூறிய கருத்துக்கள் இலங்கைத் தமிழரின் மன எண்ணங்களை - நிலைப்பாட்டை - புரியாமல் கூறப்பட்டவையாக அமைந்தமைதான் இலங்கைத் தமிழருக்கு விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதுவும், இலங்கை சமாதான முயற்சிகளில் விசேட பங்களிப்பும் வழங்கி முக்கியத்துவமும் பெறும் ஜப்பானின் பிரதிநிதி இப்படித் தடம்மாறி கருத்து வெளியிட்டிருப்பது முறையற்றது என்பதே தமிழர் தரப்பின் நிலைப்பாடாகும்.

*"உத்தேச இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு பற்றியதல்ல என்பதால் அது குறித்து எச்சரிக்கை கொள்ள ஒன்றுமேயில்லை.*

*"இந்த ஒப்பந்தம் இரண்டு இறைமையுள்ள நாடுகளுக்கு இடையில் செய்யப்படுவதால் இதில் விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவிப்பதற்கு எதுவுமேயில்லை என்று நான் நினைக்கின்றேன்"* - இப்படி கொழும்பு செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியிருப்பது தமிழர்களைச் சினத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

இலங்கை விவகாரத்தில் ஜப்பானின் பங்களிப்பு இந்தியாவை எரிச்சலுற வைத்திருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

எனவே, இந்தியாவை சமாளிக்க - அதைத் திருப்திப்படுத்த - வேண்டிய தேவை ஜப்பானுக்கு உள்ளது. அதற்காக ஈழத்தமிழர்களின் நிலைமையைப் பகடைக்காயாக்கி உருட்டி விளையாட ஜப்பான் முயலக்கூடாது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சர்வதேசத்திடம் தமிழ் உலகம் கையேந்தி நிற்கின்றது என்பது உண்மையே. அவ்வாறு நாம் உதவி கோரும் நாடுகளில் ஜப்பான் முன்னணியில் உள்ளது என்பதும் சரிதான்.

நாம் கைநீட்டி உதவி கேட்கிறோம் என்பதற்காக எங்கள் தலையில் மிளகாய் அரைக்கும் வகையில் கருத்துக்கூற ஜப்பான் முயலக்கூடாது. அதுவும் இலங்கை சமாதான முயற்சிகளில் நடுநிலைப் பங்கு வகிப்பதாகக் காட்டிக்கொண்டு, இவ்விடயத்தில் மூக்கை நுழைத்திருக்கும் ஜப்பான், அந்த நடுநிலைப் போக்கை விட்டுத் தவறும் விதத்தில் காட்டிக்கொள்வது - செயற்படுவது - பொருத்தமற்றது.

ஈழத்தமிழர்களின் அனுமதியோ இணக்கமோ இன்றி ஈழத்தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தை - அகாஷி இறைமையுள்ள நாடுகள் என்று குறிப்பிடும் இலங்கையும், இந்தியாவும் - தம்பாட்டில் 1987இல் செய்துகொண்டதும் அதன் விளைவுகளும் பெறுபேறுகளும் அகாஷிக்குத் தெரியாமல் இருக்காது.

பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் என்ற பெயரில் செய்யப்படும் இந்த உடன்பாடு வடக்கு - கிழக்கு சம்பந்தப்பட்டதல்ல என்ற சாரப்பட அகாஷி கூறியிருப்பது முழித்திருப்பவன், தூங்குபவன் போல நடிப்பதற்கு ஒப்பானது.

இந்த உத்தேச ஒப்பந்தம் இரு இறைமையுள்ள நாடுகளுக்கு இடைப்பட்டது என்று வக்காலத்து வாங்குகின்றார் அகாஷி. அவர் இலங்கை விவகாரத்தில் இன்றும் போற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தம், இலங்கையில் தமிழர் தரப்புக்கென - புலிகளின் கட்டுப்பாட்டில் - தனியான நிலப்பிரதேசம், நிர்வாகக் கட்டமைப்பு, சட்டம் - ஒழுங்கு பேணும் ஏற்பாடுகள் எல்லாம் இருப்பதை உறுதி செய்கின்றது. அத்தகைய நில இழப்பையும், கட்டுப்பாட்டுப் பிரதேச இழப்பையும் கொண்ட இலங்கைதான் இறைமையுள்ள நாடு என்றும், அது செய்யும் ஒப்பந்தம் தமிழர் தரப்பாகிய புலிகளைப் பாதிக்காது என்றும் 'தத்துவம்' பேசுகிறார் அகாஷி.

இங்கு யுத்தநிறுத்தம் தாக்குப்பி[illegible]தே, இராணுவச் சமநிலையைப் பேணுவதிலேயே தா[illegible]ளது என்று அமைதி முயற்சிக்கு அனுசரணைப் [illegible] வழங்கும் நோர்வே திரும்பத்திரும்பக் கூறியுள்ளது.

இந்நிலையில், அதைப் பாதிக்கும் [illegible] தமிழர் தரப்புக்குப் பாதகமாகவும் சிங்களவர் த[illegible] மாகவும் அமையப்போகும் இந்த உத்தேச [illegible] விழுந்தடித்து நியாயப்படுத்த அகாஷி [illegible] இலங்கை விவகாரத்தில் ஜப்பானின் நடுநிலை[illegible] கண்ணியத்துக்கு ஏற்பட்ட ஒரு மாசு அன்றி வேறில்லை.

"இலங்கை - இந்திய ஒப்பந்தம் பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் உட்பட்ட விடயம். அது குறித்து நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை" - என்று அகாஷி கூறியிருந்தால் அது நியாயமானதாக இருந்திருக்கும்.

அதைவிடுத்து, ஈழத்தமிழரை ஒரு புறமாகத் தள்ளி, அவர்களைப் பாதிக்கும் விதத்தில் அமையும் இந்த ஒப்பந்தத்துக்காக வக்காலத்து வாங்கவேண்டிய தேவை அகாஷிக்கு ஏன் வந்தது?

# தீபாவளி வியாபாரம் சூடுபிடிக்கின்றது மழைக்கு மத்தியிலும் நகரில் சனத்திரள்!

யாழ்ப்பாணம்,நவ.4

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரப் பகுதிக் கடைகளில் வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் யாழ். நகரப்பகுதிக் கடைகளுக்கு ஏராளமான மக்கள் தினமும் பொருள்களை வாங்குவதற்கு வந்து குவியத் தொடங்கிவிட்டனர்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு தீபாவளி நெருங்குவதற்கு முன்னரே நகரப் பகுதியில் சன நெரிசல் ஏற்படத் தொடங்கிவிட்டது.

நகரில் அவ்வப்போது பெய்துவரும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் தினமும் பெருமளவில் படையெடுத்து வருகின்றனர். இதனால் அங்கு மாலை வேளைகளில் போக்குவரத்துக்குப் பெரும நெருக்கடி ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

புடைவைக் கடைகளில் வியாபாரம் அமோகமடைந்திருக்கின்றது. நகரில் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிப்பதற்காகப் பொலீஸார் விசேட போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, தீபாவளிப் பண்டிகையை ஒட்டி இம்முறை தென்னிலங்கையிலிருந்து கூடுதலான நடைபாதை வியாபாரிகள் யாழ். நகரப் பகுதிக்கு வந்து வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

எதிர்வரும் நாள்களில் நகரில் சன நெருக்கடி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-7)

# தொழில் திணைக்களக் கண்காட்சியில் வெற்றியீட்டிய யாழ். உற்பத்தியாளர்கள்

யாழ்ப்பாணம்,நவ.4

வடக்கு - கிழக்கு மாகாணத் தொழில்துறைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாணமட்ட கைத்தொழில் கண்காட்சிப் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றி பெற்ற போட்டியாளர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**சிறுகைத்தொழில் பொருள்கள்**

மட்பாண்டம் - முதலாமிடம் எஸ்.ரகுராகவன் (அளவெட்டி), மூன்றாமிடம் கே.பத்மாவதி (வட்டுக்கோட்டை).

ஓவியம் - முதலாமிடம் எஸ்.ரகுராகவன் (அளவெட்டி), இரண்டாமிடம் எஸ்.ரகுராகவன், மூன்றாமிடம் ரி.சுதர்சன் (பருத்தித்துறை).

தும்புப் பொருள் (கால்மிதி) - முதலாமிடம் வி.சிவச்சந்திரா (சாவகச்சேரி), இரண்டாமிடம் எஸ்.கௌசல்யா (துன்னாலை), மூன்றாமிடம் ஆர்.பாமினி (அளவெட்டி).

சங்கீதப் பொருள்கள் - முதலாம், இரண்டாமிடங்கள் ஏ.இராஜநாயகம் (கச்சேரி, நல்லூர் வீதி).

கழிவுக் கடதாசியிலான மென்பொருள்கள் - முதலாமிடம் எஸ்.தியாகராசா (மானிப்பாய்), இரண்டாமிடம் எஸ்.தியாகராசா (மானிப்பாய்).

பனை சார் உற்பத்திப் பொருள்கள் - முதலாமிடம் ஆர்.ரஞ்சனாதேவி (அரசடி, அல்வாய்), இரண்டாமிடம் ஜி.சிவகௌரி (துன்னாலை), மூன்றாமிடம் ஆர்.லக்ஷிகா (அல்வாய்).

தும்புத்தடி - மூன்றாமிடம் கே.கிருஷ்ணலதா (மீசாலை).

கண்ணாடி இழைநார்ப் பொருள்கள் - முதலாமிடம் எம்.திருநாவுக்கரசு (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்).

இயற்கைக் காட்சி (ஓவியம்) -இரண்டாமிடம் ரி.சுதர்சன் (பருத்தித்துறை).

**நெசவுப் பொருள்கள்**

படுக்கை விரிப்பு - முதலாமிடம் கே.சுகுணா (ஏழாலை நெசவு நிலையம்), இரண்டாமிடம் ரி.சசிக்குமாரி (சங்குவேலி நெசவு நிலையம்), மூன்றாமிடம் எஸ்.சிவமலர்) கணேஸ்வரன் நெசவு நிலையம்).

பாடசாலைப் பை - இரண்டாமிடம் கே.சுபோதினி (துன்னாலை நெசவு நிலையம்).

துவாய் - முதலாமிடம் ஆர்.கமலாதேவி (பண்ணாகம் நெசவு நிலையம்), இரண்டாமிடம் எஸ்.ஜெயராணி (அராலி தெற்கு நெசவு நிலையம்), மூன்றாமிடம் எஸ்.சாயினி (நவக்கிரி நெசவு நிலையம்).

கன்வஸ் துணி - இரண்டாமிடம் எம்.மேரி றெஜினா, ஏ.சாந்தி (நெல்லண்டை நெசவு நிலையம்).

சேவியற் - இரண்டாம், மூன்றாமிடங்கள் எஸ்.கிருஷா (அராலி தெற்கு நெசவு நிலையம்).

தலையணை உறை - முதலாமிடம் எஸ்.கிருஷா (அராலி தெற்கு), இரண்டாமிடம் பி.ரஞ்சினி (துன்னாலை வடக்கு), மூன்றாமிடம் எஸ்.சுகந்தினி (இமையாணன்).

சிறிய மேசை விரிப்பு - முதலாமிடம் கே.சுபோதினி (துன்னாலை வடக்கு), இரண்டாமிடம் கே.துஷ்யந்தன் (கந்தர் மடம்).

கதிரை விரிப்பு - மூன்றாமிடம் எம்.தயாநிதி (கரவெட்டி). (3-5)

# வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒரே நாளில் நான்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன

வடமராட்சி,நவ.4

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் ஒரே நாளில் ஒரே மேடையில் நான்கு நிகழ்வுகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளன.

'நிகொட்' நிறுவனத்தின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட சமையற்கூடத்தை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்து வைக்க, அங்கு புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன இரத்தப் பரிசோதனை நுண்கருவியைச் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் ஆரம்பித்து வைப்பார்.

தொடர்ந்து கடந்த வருடம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வல்வெட்டித்துறை நகரைச் சேர்ந்த 10 மாணவர்கள் நகரத்திலிருந்து வைத்தியசாலை வளாகம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், அபிவிருத்திச் சபையினால் கடந்த மாதம் பிற்பகுதியில் நடத்தப்பட்ட 20ஆவது இலவச கண் பரிசோதனை முகாமின்போது தெரிவான அனைவருக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வுகளுக்கு வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர், பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன முதல்வர் வால்டர் கெல்லர், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், பருத்தித்துறை பிரதேச செயலர் சு.வசந்தகுமார், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு, வடமராட்சி மீனவர் சமாசப் பொது முகாமையாளர் க.சூரியகுமார் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.(10-173)

# வீதியை விட்டு விலகிய பஸ் தோட்டக் காணியில் புகுந்தது!

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறை ஊடாகப் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட வடபிராந்தியப் போக்குவரத்துச சபையின் பஸ் ஒன்று வீதியைவிட்டு விலகித் தோட்டத்துக்குள் புகுந்து புதையுண்டது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் சிறுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியால் வந்துகொண்டிருந்த மினி பஸ் ஒன்றுக்கு வழிவிட்ட நேரத்திலேயே பஸ் தோட்டத்துக்குள் புகுந்து முன்பக்கச் சில்லுத் தோட்டத்துக்குள் புதையுண்டது.

சம்பவத்தின்போது பயணிகள் எவருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படவில்லை.

பின்னர் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் 'கிறெய்ன்' (பாரம் தூக்கி வண்டி) வரவழைக்கப்பட்டு பஸ் வண்டி தோட்டத்திலிருந்து மீட்கப்பட்டது. (10-173)

## நாளை

ஐப்பசி 20
வெள்ளிக்கிழமை
(05.11.2004)
திதி: அட்டமி
முன்னிரவு 10.00 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
முழுவதும்
சுபநேரம்: 6.05 - 07.35
ராகு காலம்: 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

# சமஷ்டி அரசியல் அமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்

வலி.வடக்கு,நவ.4

சமஷ்டி அரசியல் அமைப்புச் சம்பந்தமான தெளிவை இலங்கை மக்களிடையே ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜேர்மன் நாட்டில் உள்ள மோதல், தீர்வு, ஜனநாயகம் மற்றும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கான கூட்டு என்ற அமைப்பினால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

ஜனநாயகத்திற்கும் சமத்துவத்திற்குமான அமைப்பின் அமைப்பாளர் எஸ்.சிவகுருநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில், ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பௌல் சங்காட் மற்றும் ரஞ்சித் கெனயக லொச்வைகிர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

டிசெம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் மாவட்ட ரீதியாகப் பிரதிநிதிகளை அழைத்துச் சர்வதேச நாடுகளின் சமஷ்டி சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும இக்கலந்துரையாடலில் தெரிவிககப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இம்மாநாடு கூட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-86)

## உதாவாக்கு

முன் சிந்தித்து பின் செயற்பட்டால் உனக்கே வெற்றி.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

மருதனார்மடம், உரும்பிராய் வீதியிலுள்ள அருளகத்திற்கு அண்மையில் கிணற்றுடன் 11 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வன் ஸ்ரோர்ஸ், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். தொலைபேசி இல.: 077 6264161, 0314 872866. (38180)

யாழ்ப்பாணம், பிரதான வீதியில், இரண்டாம் குறுக்குத்தெரு சந்திக்கு அருகில் ஒரு பரப்பு இரண்டு குளி, சுற்றுமதிலுடனும், நன்னீர்க் கிணற்றுடனும், குளியல் அறையுடன் ரொயிலட்டும் அடங்கிய வசதியுடனும் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 122/1, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776-111419 (38248)

### வேப்பமரம் விற்பனைக்கு

சுமார் 5அடி சுற்றளவு உள்ள வேப்பமரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (38270)

### கோழிக்குஞ்சு விற்பனை

நத்தாருக்கு இறைச்சிக்கோழிகள் அதிகமாகத் தேவைப்படலாம். Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 08.11.2004 மாலை விநியோகிக்கப்படும். சன்னதி பாம் சென்ரர் - தொண்டைமானாறு, சிவகலை களஞ்சியம் - கோப்பாய், நல்லூர் Farm Centre - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38186)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு, மூலம் 3ஆம் பாதம், MBBS டாக்டருக்கு பண்பான, அழகிய, ஓரளவு படித்த மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 0773107662. (38262)

### தவறிவிட்டது

02.11.2004 செவ்வாய்க்கிழமை உடைகளும் வேறு சில ஆவணங்களும் அடங்கிய கறுப்புநிறமான கைப்பை ஒன்று கைதடிக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: நியூ பிரசாந்தி ஜுவல்லறி, 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும். (38273)


## தொழில்நுட்பக் கல்லூரியில் ஊடகவியல் டிப்ளோமா

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்தொழில்நுட்பக் கல்லூரியில் ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறி முதல்முறையாக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறியில் பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள் போன்றோர் உள்வாங்கப்படவுள்ளனர் என்று கல்லூரியின் அதிபர் என்.யோகராஜா தெரிவித்துள்ளார். (4-13)


**TITAவின்**

**இலவச கணனிப் பயிற்சி**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

***(கணனி அறிமுகம்)***

*காலம்:* 06-11-2004 சனிக்கிழமை
காலை 8.30 மணி (பு.நே.)

*இடம்:* இளந்தாரி கோயிலடி, இணுவில் கிழக்கு.

- நிர்வாகம்.

இணுவில் கிழக்கு இளைஞர் கழகம். (38271)


## மரண அறிவித்தல்

### செல்வி சோமசுந்தரம் தெய்வநாயகி (பொன்னான்)



காங்கேசன்துறை, குரு வீதியைப் பிறப்பிடமாகவும் அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோமசுந்தரம் தெய்வநாயகி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.11.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - மாரிமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற முருகேசு (பொறியியலாளர்) மற்றும் பராசக்தி, யோகேந்திரம் (சுன்னாகம் திருமகள் அச்சக ஊழியர்), கனகாம்பிகை, கணேசநாதன் (முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரி (கனடா), கைலாசபிள்ளை (ஸ்ரீலங்கா புத்தகசாலை), காலஞ்சென்ற சுந்தரேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் சந்தியா (கனடா), சதீஸ் (லங்கா புத்தகசாலை, கொழும்பு), கௌசியா (ஆசிரியை, யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சித்தியும் மஞ்சுளா, பிறேமினா, மகிபாலன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.18, அன்னசத்திர லேன்,*
*பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சோ.யோகேந்திரம் (யோகன்).

(C-38671)(38-14-15-26)

# குளங்கள் புனரமைப்பு விவகாரம் தொடர்பாக உண்மை தெரியாமல் புலம்புகிறார் ஜனாதிபதி

## ஜே. வி. பி. அமைச்சர் அநுரகுமார காட்டம்

கொழும்பு,நவ.4

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தில் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக ஜனாதிபதி சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. அமைச்சரவையில் வெளியிடப்பட்ட கருத்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்குக்கூடத் தெரிவிக்காமல் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல். உண்மை தெரியாமல் புலம்புகிறார் ஜனாதிபதி.

- இப்படிக் காட்டமான கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார் ஜே.வி.பி.யின் அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க. அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பத்தாயிரம் குளங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் வேலைத் திட்டத்தில் பல கோடி ரூபா மோசடி செய்யப்பட்டிருக்கிறது. இது பற்றி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இந்த விடயம் பற்றி அமைச்சரவை முடிவுகள் வெளியிடும் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்படி அமைச்சரவைத் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர், குளங்கள் புனரமைப்பது தொடர்பில் குளறுபடிகள் ஏற்பட்டிருந்ததா என அதனுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற ரீதியில் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். அதைவிடுத்து, ஜனாதிபதி இது குறித்துச் சம்பந்தப்படாதவர்களுடன் கதைத்திருப்பது வேதனைக்குரியது.

எனது தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பத்தாயிரம் குளங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தில் எவ்வித ஊழல்களும் இடம்பெறவில்லை.

அப்படி இடம்பெற்றிருந்தால் எனது தவறுகளை மட்டும் தேடிக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சியினர் சும்மா பார்த்துக்கொண்டு இருப்பார்களா?

ஜே.வி.பியுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அமைய ஜனாதிபதி நடந்திருப்பாரானால் பகிரங்கக் கடிதமொன்றை அவருக்கு அனுப்ப வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டிருக்காது. ஜே.வி.பி. இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கிக் கொண்டுசெல்லவே தீர்மானித்துள்ளது. அதன்படியே செயற்பட்டும் வருகிறது. மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பவர்கள் அல்லர் நாம்.

குளங்களைப் புனரமைப்பது தொடர்பான ஒப்பந்தங்கள் விவசாய அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நிறுவனங்களுடன் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. எந்தத் தனியார் நிறுவனத்துக்கும் ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி என்ற வகையில் யாரும் சொல்லும் பொய்யான கதைகளைக் கேட்டுத் தீர்மானம் எடுப்பது அர்த்தமற்ற செயல். உரிய விவரங்கள் இன்றித் தான்தோன்றித்தனமாக ஜனாதிபதி முடிவெடுப்பதை நாம் அனுமதிக்கமுடியாது. எதுவாக இருப்பினும் உரிய முறையில் ஆராய்ந்த பின்னரே அதுபற்றி முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

- என்று அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# ஆலோசனைக் கவுன்ஸிலின் சர்வமதக்குழு நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடியது

கொழும்பு,நவ.4

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் சர்வமதக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குச் சர்வமதத் தலைவர்களே தலைமை வகித்தனர்.

கூட்டத்தில் பிரதானமாக ஆறு விடயங்கள் குறித்துக் கலந்தாலோசிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதான முறையில் அமைதல், வடக்கு - கிழக்கிற்கான தீர்வுக்குத் தேவையான அரசியல் மாற்றம், அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயகத்தைப் பலப்படுத்துதல் என்பன கலந்துரையாடப்பட்டவற்றுள் முக்கியமானவை எனத் தெரிவிக்கப்பட்டது.

சர்வமதக் குழுக் கூட்டத்தில் பௌத்த, இஸலாமிய, இந்து, கிறிஸ்தவ மதத்தலைவர்கள் பங்கேற்றிருந்தனர்.

## பட்டதாரிகள் பயிற்சி இன்று ஆரம்பம்

தென்மராட்சி,நவ.4

தென்மராட்சிப் பிரதேச பட்டதாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி நவீன சந்தை மேலமாடி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், மீசாலை கமநல சேவைகள் நிலைய மணடபம், கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் இப்பயிற்சிகள் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பயிற்சி நிலையமாக முன்னர் அறிவிக்கப்பட்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய இரண்டுக்கும் பதிலாக சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி மண்டபம், மீசாலை கமநலசேவைகள் நிலைய மண்டபம் ஆகியன ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(4-117)

## சாயி சிந்தனை

### *அன்புக்குக் குணங்கள் ஏது?*



இறைவன் குணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். அன்பிற்கும் குணங்கள் எதுவும் கிடையாது. ஆனால், இந்நாளில் துரதிர்ஷ்டவசமாக அன்பைச் சில குணங்களுடன் இணைத்துப் பார்ப்பதால் பந்தங்களுக்கும் வெறுப்புக்கும் இடம் ஏற்படுகிறது. நாம் யாரிடமும் பிரதிபலன் கருதி அன்பு செலுத்தக்கூடாது. பலனை எதிர்நோக்கி, அன்பு காட்டுவது என்பது ஒரு வியாபாரத்தைப் போன்றது. அன்புக்கு, வியாபாரத்துடன் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அன்பு என்பது கொடுப்பது, வாங்குவது என்றெல்லாம் இணைத்துப் பார்ப்பது அல்ல. எந்தப் பலனும் எதிர்பாராது சரணாகதியாவதுதான் அன்பு.

இத்தகைய புனிதமான அன்பைப் பெறவேண்டுமானால், உங்கள் எண்ணங்கள் புனிதமானவையாக மாறவேண்டும்! அன்பு என்பது 'மாக்னடிக் காம்பஸ்' (காந்த அலைகளை வைத்து வழி காட்டும் கருவி. திசைகளை அறிய இதைப் பயன்படுத்துவார்கள்). அதன்முள் எப்போதும் வடக்குத் திசையையே காட்டிக்கொண்டிருக்கும் (எந்தப் பக்கம் அந்தக் காம்பஸைத் திருப்பினாலும் அதன் உள்ளிருக்கும் கடிகாரமுள் வடக்குத் திசை நோக்கித் திரும்பிவிடும்). அதே போலவே மனிதனுடைய அன்பும் அவன் எந்த நிலையில் இருந்தாலும் - கடவுளை நோக்கித் திருப்பப்பட வேண்டும். அதுதான் உண்மையான அன்பு!

*ஆதாரம்:சனாதன சாரதி.*

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,நவ.4

மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற இளைஞர், குறுக்கே மாடு பாய்ந்ததால் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தார்.

கொட்டடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த சோமலிங்கம் வரதராசா (வயது 22)என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

அவரது மோட்டார்சைக்கிளும் சேதமடைந்தது. அவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-12)





**PC UPGRADE**

**Pentium I, Pentium II, Pentium III, Cyrix MI/MII, AMD**

முதலீடு ரூ.22,500 மட்டுமே

**Intel P4 / Celeron 2.0 Ghz**

- உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
- உங்கள் அலுவலகத்திற்கு அல்லது வீட்டிற்கு நேரடியாக எமதுதொழில்நுட்பவியலாளர்கள் வந்து கணனியை பரிசீலனை செய்யும் வசதி

**MICRO PC SYSTEMS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 071 2374181 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வெள்ளவத்தை | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4513235, 011-4516784 |
| கொட்டாஞ்சேனை | 82, New Chetty St, Kotahena, Tel: 011-4613617, 011-4619673 |



உ

சுவாமியே சரணம் ஐயப்பா!

**கோண்டாவில்**

**அருள்மிகு சபரீஸ ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்**

**மஞ்சமாதா அம்மன் ஏழுந்தருளி கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

**இன்று (04.11.2004) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு மேல் கிரியைகள் ஆரம்பமாகி 9.09 மணிமுதல் 11.06 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.**

**முற்பகல் 11.00 மணிக்கு நூல் வெளியீடு**

சபரீஸ கானம் - பக்திப் பாமாலை - பஜனை - வரலாறு - தத்துவம் ஆகியன உள்ளடங்கிய நூல். ஐயப்ப பக்தர்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

இம்முறை மாலை அணிந்து புனித விரதம் அனுஷ்டிக்கும் ஐயப்ப பக்தர்கள் - சபரிமலை செல்ல இருப்பவர்கள் - முன்கூட்டியே தேவஸ்தானத்தில் பதிவுசெய்யலாம். யாத்திரைக்கான சகல ஒழுங்குகளும் தேவஸ்தானம் மூலமே செய்துகொள்ளலாம்.

விரதத்துக்கு வேண்டிய மாலை முதலிய பொருள்களைத் தேவஸ்தானத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

இன்று 04.11.2004, 06.11.2004, 13.11.2004 முதலிய நாள்களில் தேவஸ்தானத்துடன் தொடர்புகொள்ளலாம்.

☎ 021 222 7688
0777 110624 (38272)

ஆலயப் பிரதம குருவும். அறங்காவலரும்
பிரம்மஸ்ரீ அரிகரசுத சர்மா.

(24-14-26-15)

**ITN இன் மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை**

இன்று 04.11.2004 வியாழன்முதல் 11.11.2004 வியாழன் வரை

1. ஓடியோ CD கள்
2. பதிவுசெய்யப்பட்ட ஓடியோ கசெற்றுக்கள்
3. MP3 கள்
4. கணனி மென்பொருள் CDகள்
5. வீடியோ CDகள்
6. காட்டூன்கள்
7. DVD

ஆகியவற்றின் பழைய, புதிய திரைவிருந்துகள்
அதிரடி விலைக் கழிவில்

**ITN** வீடியோ ஓடியோ மியூசிக் சென்றர்
305, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

(சி-38670) (38-14-15-26)

# ஒரே நோக்கத்தைக் கருத்திற்கொண்டு முன்பள்ளிகளை வளர்க்க வேண்டும்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கருத்து



யாழ்ப்பாணம்,நவ.04

முன்பள்ளிகளினை ஒரு மதம் சாா்ந்த, நிறுவனம் சாா்ந்த நோக்கில் அமைத்து வளா்ப்பதைத் தவிா்த்து ஒருங்கிணைநத ஒருமைப்பாட்டின் கீழ் ஒரே நோக்கத்தினை கருத்திற்கொண்டு வளா்க்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தாா். யாழ்.மாவட்ட அசியல்துறைப் பொறுப்பாளா் சி.இளம்பரிதி.

கோப்பாய் ஆசிரியா் கலாசாலையில் வடக்கு-கிழக்கு மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள் யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடத்திய முன்பள்ளி கண்காட்சி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவா் மேற்கண்டவாறு தெரிவித்தாா்.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளா் எஸ்.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவா் மேலும் தெரிவித்ததாவது:

இன்று கல்விக்கு அடித்தளமாக விளங்குகின்ற முன்பள்ளிகளை எடுத்துக்கொண்டால் ஒரு சரியான வசதியினை முன்பள்ளி சிறாா்கள் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையே காணப்படுகின்றது.

சிறாா்களுக்கான கல்வி கற்கும் சூழல், காற்றோட்ட வசதி, கட்டட அமைப்பு போன்றன இங்கு இல்லை.

சிறாா்கள் காற்றோட்டமான மகிழ்ச்சிமிக்க நிலையில் இருந்து தமது ஆரம்பக் கல்வியைக கற்க முடியாத நிலை உள்ளது.

இந்த முன்பள்ளிகளில் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியா்களின் வேதனங்களையும் கவனிக்கவேண்டும். இதுதொடா்பாக கல்வி அமைசசு அதிகாாிகள் கவனம் செலுத்தவேண்டும் என்றாா்.

கல்வி அமைச்சின் செயலாளா் ஆா். தியாகலிங்கம் தனதுரையில் -

ஆரம்ப முன்பள்ளி என்பது எவ்வளவு தூரம் முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரிகின்றது. எமது கல்வி அமைச்சு வழிகாட்டல், மேற்பாா்வை போன்ற கடமைகளை மட்டும் தான் முன்பள்ளிகளுக்கு செய்யமுடிகிறது. ஆனால், ஏனைய மாகாணங்களைவிட வடக்கு -கிழக்கு மாகாணங்களின் முன்பள்ளிகள் மாறுதலான முன்னேற்றங்களுடன் திகழ்கின்றன. ஆனால் சில சில விடயங்களில் கல்வி அமைசசின் கொள்கை அடிப்படையில் தீா்மானிக்க வேணடியுள்ளது.

நிறுவன முறைசாா்ந்தவை கல்வி அமைச்சினால் உள்வாங்கப்படுவதில்லை.

ஆனால், சமய உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளுக்கு வழிகாட்டியாகவும் மேற்பாா்வையாகவும் திகழும் தமிழா் புனா்வாழ்வுக்கழகத்தின் பங்கு மகத்தானது என்றாா்.

இந்தக் கண்காட்சி மூலம் சிறாா்கள், ஆசிாியா்கள், பெற்றோா்கள் ஆகியோரிடம் முடங்கி இருந்த திறமைகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன என்றாா்.

இறுதியில் மாணவா்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-180)

# பாடசாலைகளுக்கு முன்பாகவும் உண்டியல் வைக்க வேண்டும்

வட்டுக்கோட்டை, நவ.4

எமது ஆலயங்களுக்கு முன்பாக திருப்பணி உண்டியல் வைக்கப்பட்டிருப்பது போல ஒவ்வொரு பாடசாலைகளுக்கு முன்பாகவும் உண்டியல் வைக்கப்பட்டு ஆலயங்களுக்கு உண்டியலில் போடப்படும் நிதியில் ஒரு பகுதியை இந்த பாடசாலை உண்டியலிலும் போட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளாா் சங்கானை கல்விக்கோட்டப்பணிப்பாளா் நா.சண்முகசுந்தரம். சங்கானைக் கல்விக் கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு விழாவுக்கு தலைமை வகித்து அவா் உரையாற்றினாா்.

அவா் மேலும் பேசும்போது, ஆலயங்களுக்கு பெருமளவு நிதி வழங்கப்படுகிறது. ஆலயங்களுக்கு மக்கள் சென்று வழிபடாது குடும்ப கதை மற்றும் ஊா் புதினங்களையே பேசுகின்றனா். இவ்வாறு பெருந்தொகையாக வழங்கப்படுகின்ற நிதியில் ஒரு பகுதியை பிள்ளைகளின் கல்விக்கு அவா்கள் வழங்கலாம். அதற்காகவே பாடசாலைகளின் முன்னால் உண்டியல் வைக்கப்படவேண்டும் - என்றாா்.

இந்நிகழ்வில் ஆசியுரை வழங்கிய வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளா் சு.சுந்தரசிவம் தமதுரையில், சைவா்கள் வீபூதி அணியாவிட்டாலும், பாதகமில்லை. உள்ளத்திலே தூய்மையும், சேவை செய்யும் மனப்பான்மையும் இருந்தாலே போதுமானது. ஆசிரியா் பாடசாலையை தங்கள் உாிமைகளை நிலைநாட்டும் இடமாகக்கொள்ளாது மாணவா்களின் கல்வி வளா்ச்சிக்கு உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தாா்.

விழா ஞாபகாா்த்த மலா் வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார அலுவலா் செல்வி ரஜனி கந்தசாமியால் வெளியிட்டு வைக்கப்பட்டது. செல்வி புஸ்பா செல்வநாயகம் முதன்மை உரை நிகழ்த்தினாா்.

அ.தற்பரானந்தன், சங்கானை மக்கள் வங்கி முகாமையாளா் பொன் அச்சுதம்பிள்ளை, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளா் ச.கைலாசநாதன் ஆகியோா் வாழ்த்துரைகளை வழங்கினா். சைவ கலாசார விழாவினை முன்னிட்டு நடத்தப்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மானவா்களின் பண்ணிசை, புராணபடனம், கதாப்பிரசங்கம் என்பன இடம்பெற்று பாிசில்கள் வழங்கப்பட்டன.

(ப-161)

# அபாயகரமான சூழ்நிலைகளில் கண்ணிவெடிகளை அகற்றுகின்றோம்

## வெண்புறா பரிசளிப்பு நிகழ்வில் 'யுனிசெவ்' அலுவலா்

நல்லூா்,நவ.4

மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதே 'யுனிசெவ்' நிறுவனத்தின் முக்கிய நோக்கம்.

வெண்புறா செயற்கை உறுப்புக்கள் தொழில்நுட்ப நிறுவனத்தின் கண்ணிவெடி இடா் அபாயக் கல்வி தொடா்பான பாிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய 'யுனிசெவ்' நிறுவனத் திட்ட அலுவலா் யூடிற் புறுனோ இவ்வாறு கூறினாா்.

'யுனிசெவ்' ஆதரவில் நடைபெற்ற இந்த வைபவத்தில் யூடிற்புறுனோ மேலும் பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கண்ணி வெடிகள் நிறைந்து இருப்பதால் பிள்ளைகள் சிறப்பாக வாழமுடியாதிருக்கிறது. கண்ணிவெடி அகற்றும் திட்டம் இலகுவானதல்ல. எமது உத்தியோகத்தா்கள் மிகவும் அபாயகரமான நிலைமைகளில் செயற்படுகின்றனா். இதன் தாக்கங்கள் குறித்தும், இதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் மக்களுக்கு நாம் விழிப்புணா்வை ஏற்படுத்தி வருகின்றோம்.

வெண்புறா நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பங்காளிகளாக இணைந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. யாழ்ப்பாண சமூகம், குறிப்பாகச் சிறுவா்களுக்கு இந்த வெடிகளின் அபாயம் குறித்து அறிவுரைகள் வழங்கிவருவது இன்றியமையாத தேவையாகும். மக்கள் எதிா்நோக்கும் சவால்களில் ஒன்றான கண்ணி வெடிகள் பற்றி மிகவும் ஜாக்கிரதையாக இருதல் அவசியம் - என்றாா்.

வெண்புறா நிறுவனத்தின் உபதலைவா் சட்டத்தரணி ாி.சிவலிங்கம் தனது தலைமை உரையில், கண்ணிவெடி உட்பட ஏனைய வெடி பொருள்கள் குறித்த கருத்தரங்குகள், போட்டிகள் என எம்மால் நடாத்தப்பட்டுவரும் ஒவ்வொரு செயல்களுக்கும் 'யுனிசெவ்' நிறுவனம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. நாங்கள் இணைந்த கரங்களாக இருந்து அதற்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும். யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இந்த அபாயகரமான வெடிகளை எடுப்பதற்குச் சா்வதேச ாீதியாக அவா்கள் தரும் உதவிகள் முக்கியத்துவம் மிக்கவை. சிறுபிள்ளைகளுக்கும் உாிய அறிவுறுத்தல்களை எமது நிறுவனம் வழங்கி வருகின்றது என்று கூறினாா்.

டனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகா் ஹாிவல்ஜகான் பேசும்போது -

நாங்கள் இந்தக் கண்ணிவெடி குறித்த விடயத்தை மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதுகின்றோம். எமது தாபனம் மட்டுமன்றி ஏனைய தாபனங்களும் கூடச் சோ்ந்து செயற்பட்டாலும் கண்ணிவெடி அகற்றும் பணியை விரைவாகச்செய்து முடிக்க இயலாது. அதனால் தான் சில இடங்களில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தாமதமாகின்றது - என்றாா்.

இந்த நடவடிக்கையின்போது எமது கால்களை மட்டுமல்ல உயிரையும் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. எல்லோரும் ஒன்றிணைந்து இந்த வெடிகளை அகற்றுவதில் விழிப்புணா்வுடன் செயற்படவேண்டும் - என்று அவா் மேலும் கூறினாா்.

கா.குமாரகுலசிங்கம், ஜே.அாியரத்தினம் ஆகியோரும் பேசினாா்கள்.

வெண்புறா நிறுவனம் நடத்திய கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றவா்களுக்கான பாிசில்களையும் சான்றிதழ்களையும் யூடிற் புறுனோ, ஹாிவல்ஜகான் ஆகியோா் வழங்கினாா்கள். (ப-111)

# பிரித்தானியரின் கல்விக் கொள்கையே இன்றும் அமுலில் இருக்கிறது



## சுட்டிக்காட்டுகிறாா் சுரேஷ் பிரேமச்சந்திரன்

வலி.கிழக்கு,நவ.4

அரசின் தவறான கல்விக் கொள்கையினால் கிராமப்புற பாடசாலைகள் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தாா் நாடாளுமன்ற உறுபபினா் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூாியின் வருடாந்த பாிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவா் மேற்கண்டவாறு தெரிவித்தாா்.

பாடசாலை அதிபா் திருமதி எஸ்.விஸ்வலிஙகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழவில் அவா் தொடா்ந்து உரையாற்றுகையில்-

இந்த நாட்டினுடைய கல்விக் கொள்கையானது பிரித்தானியரது கல்விக்கொள்கையாகவே உள்ளது. எங்களுடைய நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்புடையதாக ஆக்கப்படவிலலை. இந்தத் தவறான கல்விக் கொள்கையால் மாணவா்கள் நகா்ப்புறங்களில் உள்ள தேசிய பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றாா்கள். அப்பாடசாலைக்கு மத்திய அரசு சகல வளங்களையும் கொடுத்துள்ளது.

ஆனால், கிராமப்புறங்களிலுள்ள மாகாணப் பாடசாலைகள் தொடா்ந்தும் வளப்பற்றாக்குறையுடன் பின்தங்கிய நிலையிலேயே செயறபட வேண்டியுள்ளது. எமக்கென்று ஒரு நிா்வாகம் வரும்போது நாம் அந்த வேறுபாட்டை நீக்கி அனைத்துப் பாடசாலைக்கும் வளங்களைச் சமமாக சென்றடையச்செய்து கிராமப்புற பாடசாலைகளை வளா்ச்சியடையச் செய்யமுடியும் என்றாா்.

சிறப்பு விருந்தினா்களாக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளா் திருமதி மீரா அருள்நேசன், ஆசிாியா் இ.இரவீந்திரநாதன், நல்லூா் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா் ஆகியோரும் கலந்துகொண்டனா்.

(ப-180)

# வெறுக்கத்தக்க அளவில் கலாசாரச் சீரழிவு அதிகரிப்பு

## தேசிய எழுச்சிப்பேரவையின் பேச்சாளா் தெரிவிப்பு

இம்மண்ணில் இன்று பரவலாகக் கலாசார சீரழிவுகள் மிகவும் வெறுக்கத்தக்கவகையில் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன என்று நுகா்ச்சி உற்பத்தி கூட்டுறவுச்சமாசத் தலைவரும் தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட ஊடகப் பேச்சாளருமான க.கனகலிங்கம் குறிப்பிட்டாா்.

யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநா் கூட்டுறவுச் சங்க உறுப்பினா்களுக்கான சந்திப்பு தமிழீழ திரைப்பட வழங்குநா் கூட்டுறவுச் சங்கப் பொறுப்பாளா் ராதா தலைமையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழவில் தொடா்ந்து உரையாற்றிய க.கனகலிங்கம் -

தொலைக்காட்சிகளில் இன்று பல அலைவரிசைகள் செயற்பட்டுக் கொண்டி இருக்கின்றன. தமிழ் நிகழ்ச்சிகளும் நிறையவே காட்டப்படுகின்றன. இந்நிலைமையில் வீடியோக் கடைகள் வைத்திருப்பவா்கள் எத்தகைய கஷடங்களை அனுபவிக்கின றாா்கள் என்பதையும் உணருகின்றோம்.



பல்வேறு நிகழ்வுகளும் தொலைக்காட்சியில் சென்றுகொண்டு இருப்பதினால் மக்கள் வீடியோப் பிரதிகளைக் கடைகளில் பெறவேணடும் என்ற தேவை யில்லை. கலாசாரச் சீரழிவுகள் மிகவும் அதிகமாக இடம்பெற்றுக்கொண்டு இருப்பதுடன், கல்வியிலும்கூட யாழ். மாவட்டம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. தொழில் ாீதியாக வீடியோக்கடை உாிமையாளா்கள் விழிப்புடன் செயற்படவேணடும். இம்மண்ணுக்கும் கலாசாரச் சீரழிவுகளுக்கும் இடங் கொடுக்கக் கூடிய வீடியோப் பிரதிகளை விநியோகம் செய்வதைத் தவிா்க்கவேண்டும் - என்று கூறினாா். (ப-86)




## மறைந்த கலைஞா்களை

# இளைஞா்கள் நினைவுகூர முதியோா் வழிகாட்டவேண்டும்

வலிகாமம் தெற்கு,நவ.4

நம்நாட்டில் வாழும் முதியவா்கள் இளம் சமுதாயத்தினாின் நடவடிக்கைகளைப் பற்றி குற்றம் சொல்வதிலேயே தமது காலத்தைக் கழிக்காமல் சமுதாயத்துக்கு, சிறந்த பணியாற்றிய பொியவா்களை நன்றியோடு நினைவு கூரத்தக்கமுறையில் அவா்களை வழிநடத்திச் செல்லவேண்டும்.

இணுவில் சிவகாமி அம்மன் அன்னதான மண்டபத்தில் நடைபெற்ற காலஞ்சென்ற கலைஞா் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயாின் 'சிவகாமி அம்மன் சிந்தனைகள்' ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைத்து உரையாற்றிய கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூாி உப அதிபா் செஞ்சொற் செல்வா் ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கூறினாா்.

இணுவில் சைவத் திருநெறிய மன்றத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இவ்விழா மன்றத் தலைவா் தவராசா தலைமையில் நடைபெற்றது.

செஞ்சொற்செல்வா் ஆறு.திருமுருகன் தமது உரையின்போது,

வீரமணி ஐயாின் பாடல்கள் பக்திரசம் மிக்கவை. பக்தியை வளா்க்க நாயன்மாா்கள், ஆழ்வாா்கள் போன்றோா் அன்று இசையை முதன்மையாகப் பயன்படுத்தினா். எக்காலத்துக்கும் பொருத்தமானது இசை. இசைவடிவமே வழிபாட்டுக்கும் முதன்மையானது.



கனடாவில் வாழும் இணுவில் மக்கள் வீரமணிஐயாின் பாடல்களை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படுவது பாராட்டுக்குாியது.

பெரும் கலைஞா் என்.கே. பத்மநாதன் அமரராகிவிட்டபோது, கனடாவில் வாழும் கலாரசிகா்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் அவா் நினைவாக புலமைப் பாிசில் திட்டமொன்றை ஏற்படுத்தினா். நம்நாட்டில் வாழும் கலைஞா்களோ, ரசிகா்களோ, இதுபோன்ற செயற்பாடுகள் எதிலும் ஈடுபடாதிருப்பது கவலைக்குாியது.

கலைஞா்கள், பொியவா்களை நமது மூத்தவா்கள் நன்றியோடு நினைவு கூா்ந்து இளம் சமுதாயத்தினருக்கு வழிகாட்டவேண்டும். அமரநிலை பெற்ற எம் மண்ணின் கலைஞா்களின் நினைவாக நன்றிக்கடன் செலுத்த, அடுத்த தலைமுறையினா் அதைப் பின்பற்ற வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூறினாா்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத்.தலைவா் பெ.கனகசபாபதி வாழ்த்துரை வழங்கினாா்.

இசைநாடா பற்றிய நயப்புரையை சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ இராமநாதக்குருக்களும், சங்கீத கலாவித்தகா் திருமதி விமலாதேவி நாகேஸ்வரனும் வழங்கினா். (ப-152)

# குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தில் பாரிய மோசடியாம் ~ ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.4

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக ஐ.தே.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் விவசாயத்துறை அமைச்சருமான ஹேம குமார நாணயக்கார கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது, ஜே.வி.பியினரின் குள நிர்மாணப் பணிகளில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டமை ஆதாரபூர்வமானதாகும். இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பெருந்தொகையான பணம் ஜே.வி.பி. உறுப்பினர்களின் உறவினர்களுக்கும் கட்சிச் சுவரொட்டிகளை அச்சிடுவதற்கும் செலவிடப்பட்டுள்ளது. இதற்குத் தகுந்த ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

குளங்களைப் புனரமைப்பது எவ்வாறு என்பது பற்றி ஜே.வி.பியினர் எமக்குக் கற்றுத்தரத் தேவையில்லை. இத்தகைய திட்டங்களை முதலில் முன்னெடுத்தது ஐ.தே.கட்சியேதான்.

ஜே.வி.பியினர், வேண்டுமானால் சுவரொட்டிகள் அச்சிடுவது பற்றியும், மனிதப் படுகொலைகள் புரிவதைப் பற்றியும் பாடம் நடத்தட்டும். அதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். இந்தத் திட்ட மோசடியின் மூலம் இவர்கள் விரயமாக்குவது பொதுமக்களின் பணத்தையே மக்கள் இதற்காக இவர்களுக்கு வாக்களிக்கவில்லை - என்றார்.

ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்ரம பெரேரா, கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் ஆகியோரும் மாநாட்டில் பிரசன்னமாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-8)

# புதிய 3 அமைச்சர்களின் நியமனத்தை எதிர்த்து ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. கடிதம்

கொழும்பு,நவ.4

புதிதாக மூன்று திட்ட அமைச்சர்களை ஜனாதிபதி நியமித்தமைக்கு, அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. ஆட்சேபம் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளது.

மக்கள் ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசில் ஜே.வி.பி. வைத்துள்ள நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கும் செயல் இது என்றும் அது தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள ஆட்சேபனைக் கடிதத்தில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்த நிலையில், ஜனாதிபதி மேலும மேலும் அமைச்சர்களை நியமிப்பது, இன்னும் மக்கள் மீது சுமையை ஏற்ற வைக்கும்.

அத்தோடு, இப்படி அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் நியமிக்கும் போது ஐ.ம.சு.கூட்டமைப்பின் பிரதான பங்காளியான எம்மிடம் ஜே.வி.பியிடம் - கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி அப்படிச் செய்யவில்லை.

இந்தநிலை இப்படியே தொடருமானால் அதற்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்றும் ரில்வின் சில்வா எச்சரித்திருக்கின்றார்.

ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 83 ஆகும்.

முப்பத்தெட்டு அமைச்சர்கள், நாற்பத்து இண்டு பிரதி அமைச்சர்கள் உட்பட இந்த வாரம் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்து அற்ற திட்ட அமைச்சர்கள் மூவரும் - நஜீப் ஏ.மஜித், ரிஷாத் பதியுதீன், அமீர் அலி - அடங்கலாக மொத்தம் எண்பத்துமூன்று பேர் பதவி வகிக்கின்றனர். (க-8)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 – 07 – 1935



மறைவு 23 – 10 – 1997

### அமரர் நாகமணி இரத்தினவேல்

F.C.M.A, S.L.Ac.S.1, F.P.F.A., Dip. in P.F.M., Dip. in Accy.

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட கணக்காளர் - கடற்றொழில் நீரியல் வள அமைச்சு, பிரதம கணக்காளர் - பொலீஸ் திணைக்களம், உதவி நிதியாளர் - விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

திதி: 04.11.2004

எக்கணமும் எம்மனதில் நிலைத்துவாழும் எங்கள் அப்பா!
உங்கள் ஆன்மா
ஆடவல்லான் பாதமதில் என்றுமே இன்புற்றிருக்க இறஞ்சுகிறோம்.

நிரந்தர முகவரி:
126A, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
செந்தூரன், செவ்வந்தி (பிள்ளைகள்).
கன்னார வீதி, நல்லூர்.

(38252)(42-14-15)

"வீராட் விஸ்வப் பிரமனேய நமக"

## நன்றி நவிலலும், சபிண்டீகரண அழைப்பும்



### வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

(சிற்பாசாரியார்)

07.10.2004 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எங்களின் துயரத்தில் நேரடியாகவும், பல்வேறு ஊடகங்கள் மூலமும் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

06.11.2004 சனிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அமரரின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: *தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இவ்வறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று 31 ஆம் நாள் நிகழ்ச்சிகளில் தவறாது கலந்துகொள்ளவும்.*

40/2, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர் சார்பில்
த.பஞ்சலிங்கம் (உ.க.ப.)
சி.து.பொதுச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

(38259)(34-14-15-24)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.4

கண்டியில் அண்மையில் பத்திரிகையாளர் ஒருவர் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊடகவியலாளர் அமைப்புகள், நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

கடந்த 26ஆம் திகதி கண்டியில் வைத்து பத்திரிகையாளர் சஞ்சீவ அசேல மத்துரட தாக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்பும், கண்டனமும் தெரிவிக்கும் முகமாகவே நேற்றைய ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைச் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு, தொழிலாளர் ஊடகவியலாளர்கள் சங்கம் என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

அதேவேளை, பத்திரிகையாளர் சஞ்சீவ அசேலவைத் தாக்கினார் எனும் சந்தேகத்தில் தேடப்பட்டுவந்த உடுநுவர பிரதேச சபை உறுப்பினர் எம்.டி.ஜயசிங்க, கண்டி நீதிவான் மன்றில் சம்பவம் இடம்பெற்று இரண்டு நாள்களின் பின்னர் ஆஜரானார். அவரை நீதிவான் லியோன் செனவிரத்ன கடுமையாக எச்சரித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.


"இன்னல்கள் போக்கியெங்கும்
இருளகற்றி ஒளிபரப்ப இகமீதில்
தோன்றிய இத்தீபத்திருநாளில்"

....உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
தீபத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வுற
சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகள்
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் நிறுவனத்துடன்
இணைந்து வழங்கும் 'தீபாவளி வாழ்த்து அட்டை"
07–11–2004 அன்று
வெளிவரும் சுடர் ஒளி மற்றும் உதயன்
வார இதழ்களுடன் இலவசமாக வழங்கப்படும்
என்பதை வாசகர்களுக்கு
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.
உங்கள் பிரதிகளை முன்கூட்டியே அருகிலுள்ள
பத்திரிகை விற்பனையாளரிடம்
பதிவு செய்துகொள்ளுங்கள்.




Udhayan Graphics


## குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்

### முதியோர்தின விழா

இடம்: உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

காலம்: 07.11.2004 ஞாயிறு காலை 10.00 மணி

தலைமை: திரு.T.V.கிருஷ்ணசாமி

இந்நிகழ்வினைத் தொடர்ந்து குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

முக்கிய குறிப்பு: கடந்த வருடம் பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு மட்டும் அன்பளிப்புகள் வழங்கப்படும்.

சி.நடராஜா
தலைவர்,
கி. அ. சங்கம்.

கோ.சுந்தரமூர்த்தி
செயலாளர்,
கு.ந.ந. நிலையம்.

(38253) (24-14-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1938 – 04 – 06



மறைவு 2003 – 11 – 16

### அமரர் மாரிமுத்து மாணிக்கம்

திதி:04.11.2004

அன்பின் உருவாய் அறிவின் இருப்பிடமாய்
பண்பிலே ஆசானாய் அவதரித்தீர் - பூமியிலே
ஆண்டொன்று கடந்திடினும் ஆறுதில்லை நம் இதயம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடக்கரை வீதி,
சங்கானை.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(38251)(42)

## ஆசிரியர்களுக்கு மனித உரிமைகள் கருத்தரங்கு

சாவகச்சேரி,நவ.4

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பொருத்தமான ஆசிரியர்களுக்கான, மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி தொடக்கம் வரணி ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (3-31)

## சாவகச்சேரி நகரில் குப்பை தேக்கம்

சாவகச்சேரி,நவ.4

சாவகச்சேரி நகரில் குப்பைகள் தேக்கம் அடைந்துள்ளன.

தனங்களப்பு வீதி வெளியில் குப்பை கொட்டுவதற்குப் படையினர் வழங்கியிருந்த அனுமதி திடீரென நிறுத்தப்பட்டதால், குப்பைகள் அகற்ற இடமில்லாது குப்பை அகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மழைகாலத்தில் வீதிகளில் குப்பைகளும் கழிவுகளும் தேங்கியிருப்பதால் இலையான் பெருகுவதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (3-117)

# அரசியலில் பலமான சக்தியாக பெண்கள் உருவெடுக்க வேண்டும்



**பெண்** தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்கின்ற சமூகத்தால் அரசியலில் பெண்களின் இரண்டாம், மூன்றாம் கட்டப் பங்களிப்புக்களை ஏற்றுக்கொள்ளமுடிவதில்லை. இதுவே இன்று பெண்கள் அரசியலில் முழுமையான ஈடுபாட்டைச்செலுத்த முடியாதிருப்பதற்குக் காரணமாகும்.

**உலக அரசியலில் பெண்கள்**

உலக அரசியலில் பெண் தலைமைத்துவம் எனபது சிறப்பாகவே உள்ளது. தென்னாசியாவை எடுத்துக்கொண்டால் பல பெண் தலைமைத்துவங்களை நாம் காணலாம்.

இலங்கையில் முதலாவது பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரைக் குறிப்பிடலாம். இந்தியாவில் இந்திராகாந்தி, பாகிஸதானில் பெனாசீர் பூட்டோ போன்று பங்களாதேஷில் ஆளுங் கட்சி, எதிர்க்கட்சித் தலைமைப் பதவிகளிலும் பெண்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

உலக அரசியல் அரங்கில் தலைமைத்துவத்திற்குப் பெண்கள் வருவதை ஆணாதிக்கம் தடைசெய்யவில்லை. பெண்தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு, அடங்கி நடக்கின்றார்கள். இந்தவகையில், இலங்கை உட்படத் தென்னாசிய நாடுகளில் பெண்ணியமும் ஆணாதிக்கமும் ஒன்று சேர்வதைக் காணலாம்.

ஆனால், இரண்டாம், மூன்றாம் கட்டப் பங்களிப்பைத் தடைசெய்கின்றது. இரண்டாம் கடடப் பங்களிப்பாகக் கட்சிப் பிரமுகர்களாகவும், தொண்டர்களாகவும் பிரசாரர்களாகவும் பெண்களை ஏற்றுக்கொள்ளாததோடு மூன்றாம் கட்டப் பங்களிப்பான சாதாரண பங்களிப்பு (வாக்குப் போடுதல் அடங்கலாக) செய்வதற்கும் தடை போடுகின்றது ஆணாதிக்கம்.

**அண்மையில் அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவினரின் ஏற்பாட்டில் 'அரசியலில் பெண்கள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எ.வி.மணிவாசகர் வழங்கிய கருத்துரையின் தொகுப்பு இது.**

**அரசியல் பங்குபற்றல்**

பெண்களின் அரசியல் பங்களிப்பிற்கு சில இயல்புகளும் தடைபோடுகின்றன. பிராந்திய, பிரதேச இயல்புகளும், பெண்களின் சில இயல்புகளும் பெண்களுக்கும் அரசியலுக்கும் இடையிலான தூரத்தைக் கூட்டி நிற்கின்றன.

ஒரு பெண் வாக்குப் போடுவதும் கட்சிக்கு ஆதரவாக இருப்பதும் மட்டுமே அவளின் அரசியல் பங்களிப்பாக அமையுமா?

பெண்கள் 3 வகையில் அரசியலில் பங்கு பற்றலாம்.

1. தீர்மானம் எடுப்பதில் பங்கு பற்றல் -
2. எடுத்த தீர்மானத்தை அமுல்படுத்துவதில் பங்குபற்றல் -
3. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் நன்மைகளைப் பகிர்ந்துகொள்வதில் பங்குபற்றல் -

அரசியலில் இருக்கும் சில பெண்களும் முதலாவது பங்குபற்றலில் அரைகுறையாகச் செயற்படுகின்றார்கள். இதனால், இவர்களால் இரண்டாவது, மூன்றாவது பங்குபற்றலில் ஈடுபடவே முடியாது போகின்றது.

**பெண்களின் அரசியல் பங்களிப்பின் அவசியம்**

பெண்கள் 3 விதமான பிரச்சினைகளைத் தமது வாழ்வில் எதிர் கொள்கின்றார்கள்.

1. வீட்டிலே - கணவா, பிள்ளைகள் எனப் பலரால் பல சிக்கல்களுக்கு ஆளாகின்றாள்.
2. வேலைத் தளங்களிலே - சக ஊழியர்களாலும் உயரதிகாரிகளாலும் பல உடல், உளத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றாள்.
3. சமூகத்தில்- சமூக உறுப்பினர்களோடு பழகும்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றாள்.

இநதப் பிரச்சினைகளை பெண்கள் குடும்ப, சமூகக் கட்டுப்பாடுகளால் வெளியிலே சொல்வதில்லை. இதனால்; அவள் உடல், உள, சமூக ரீதியாகத் துன்புறுத்தப்படுவதோடு அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதிலும் தடை விதிக்கப்படுகின்றது.

**இதற்குத் தீர்வு என்ன?**

அரசியலில் பெண்கள் பங்குபற்றாமல் பல பிரச்சினைகளுக்கு அவசியமான நிரந்தரமான தீர்வு காணமுடியாது.

அரசியல் உண்மையில் மேன்மையானதுதான். அது நடைமுறையினாலேயே அசிங்கமாக்கப்படுகின்றது. பெண்கள் அரசியலை விரும்பாவிட்டாலும் தமது உரிமைகளைப் பெறவும், பாதுகாக்கவும் அரசியலில் ஈடுபடவேண்டும்.

இம்முறை நடந்துமுடிந்த தேர்தலில்தான் வடக்கு - கிழக்கில் சில பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது ஒரு நல்ல ஆரம்பம். இந்த ஆரம்பமானது பலவழிகளில் வளரவேண்டும்.

நெடுங்காலமாக இலங்கை அரசியலிலே தமிழ்ப் பிரதேசப் பெண்கள் ஈடுபடவில்லை. சிறிது காலத்தில் தலைமைப் பதவிகளில் தென்னிலங்கைப் பெண்கள் அங்கம் வகித்தார்கள். ஆனாலும், இரண்டாம் கட்ட அரசியல் பங்குபற்றலில் பெண்கள் ஒதுக்கத்தையே காட்டினார்கள். இந்த ஒதுக்கமே பெண்களை அரசியல் பலமற்றவர்களாக மாற்றியது.

எனவே, பெண்கள் அரசியலில் எந்த அளவிற்கு ஈடுபடுகின்றார்களோ, அந்த வகையில் தம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் கண்டு கொள்வார்கள்.

**பெண்கள் ஏன் அரசியலில் பங்களிப்புச் செய்வதில்லை**

பெண்களைத் தலைமைத்துவத்திற்கு அனுமதிக்கும் சமூகம் அரசியலில் ஏனைய நிலைகளில் பெண்களைப் பங்குபற்ற அனுமதிப்பதில்லை.

மேலைத்தேய நாடுகளில் ஜனநாயகம் என்பது ஒரே சீராகச் செய்வதால் உரிமை மீறல்களோ, வன்முறைகளோ அரசியலினால் மக்களுக்கு ஏற்படுவதில்லை. எனவே, மேலைத்தேய பெண்கள் இதிலிருந்து ஒதுங்குகின்றார்கள். அரசியலில் பெண்களுக்கெதிரான மீறல்கள் இல்லாததால் 'நான் போய் என்ன செய்யப்போகின்றேன்' என ஒதுங்கி நிற்கின்றார்கள்.

கீழைத்தேய நாடுகளில் அரசியல் ஒரு சாக்கடையாகவே இருக்கின்றது. இதனால், இந்தச் சீர்கெட்ட அரசியல் வேண்டாம் எனப் பெண்கள் நினைக்கின்றார்கள். இலங்கை அரசியலும் இப்படியான நிலையிலேயே இருக்கின்றது. எனவேதான், பெண்கள் அரசியலுக்கு ஒதுங்கி வாழ்கின்றார்கள்.

அரசியல் கொள்கைகளில் உள்ள குறைபாடுகளாலும் நடைமுறைகளாலும் பெண்




களுக்கும் அரசியல் மீது இனம்புரியாத வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இதனாலும், பெண்கள் அரசியலில் பங்களிப்புச் செய்வதில்லை.

எமது அரசியல் தலைவர்கள் - பிரமுகர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு அற்றுப்போனதும் இன்னொரு காரணம் எனக் கூறலாம். அத்துடன், எமதுநாட்டின் யுத்த சூழ் நிலையும், இடப்பெயர்வும் பெண்களை அரசியலிலிருந்து ஒதுக்கித்தள்ளின.

**தீர்வு என்ன?**

பெண்கள் அரசியலில் முழுமையான பங்களிப்பைச் செய்யாதுவிடினும் ஓர் அமுக்கக் குழுவாகவேனும், செயற்படவேண்டும். அமுக்கக்குழுவாகச் செயற்படும்போது கணிசமான முன்னேற்றத்தைப் பெண்கள் பெறமுடியும்.

அமுக்கக்குழுக்கள் என்பது மிகக்குறைவு. கட்சிக்கு போகாவிட்டாலும் அமுக்கக்குழுவாகச் செயற்படும்போது ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் என நடத்தி எமது பிரச்சினைகளை வெளிப்படுத்தமுடியும்.

அரசியலுக்குள் ஒரு சக்தியாகச் செயற்படக்கூடிய பெண்களாக நாம் மாற்றம் பெற

**தொகுப்பு:
தீபா – கங்கா**

முடியும்.

போராட்டத்தில் இணைந்து தமது வலிமையை வெளிப்படுத்தி ஒரு போராளியாக மிளிர்கின்ற பெண்கள் அரசியலுக்குள்ளும் நுழைந்து தமது வலிமையை வெளிப்படுத்த முடியும்.

அரசியல் இல்லாது பெண்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவோ உரிமைகளைப் பெறவோ சமூகப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளவோ முடியாது. எனவே, பெண்களுடைய அரசியல் பங்குபற்றல் இல்லாது ஆரோக்கியமான ஜனநாயகம் தோன்றமுடியாது. ஆரோக்கியமான அபிவிருத்தியும் ஏற்படாது.

எனவே, அரசியலுக்கு நோய் பிடித்துவிட்டது. அரசியல் சாக்கடை என்று சொல்லிக் கொண்டு திரிவதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அந்த அரசியலுக்குள் நாமும் நுழைந்து நோயை மாற்றவேண்டும். சாக்கடையையும் துப்புரவு செய்யவேண்டும். ★

## சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

முதலில் ஒருகதை கூறுகின்றேன். அதை வாசிக்கும்போதே நான் இன்று எழுதப்போகும் கருத்தும் விளங்கிவிடும்.

இது நீ அறிந்த கதையாயிருந்தாலும் மீணடும் ஒருமுறை வாசித்துப் பார்க்கலாம்.

முல்லா நசிருதீன் என்னும் ஒரு விகடகவி ஒருநாள் பக்கத்து வீட்டில் முள்ளங்கியைத் திருடியபோது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

நீதபதி முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். நீதிபதியும் விசாரணையை ஆரம்பித்தார்.

"ஏன் பக்கத்து வீட்டுக்குப் போனாய்? " என்றார் நீதிபதி.

"காற்று தள்ளிக்கொண்டு போய்விட்டுவிட்டது " என்றார் முல்லா.

"பின்னர் எப்படி உன் கையில் முள்ளங்கிக்காய் வந்தது? "

"காற்று என்னைத் தூக்கிக்கொண்டு போகாமலிருக்க அதைப் பிடித்துக் கொண்டேன்? "

"உன் கையில் சாக்குப்பை எப்படி வந்தது ".

"அதுதான் எனக்கும் தெரியவில்லை " என்றார் முல்லா.

நாம் தவறு செய்துவிட்டு அதை சாக்குப்போக்குச் சொல்லிச் சமாளித்து விடுவோம். இதைத் தான் 'நொண்டிச்சாக்கு' என்று சொல்கின்றார்கள். இதைப் பற்றியே நான் இன்று சொல்லப் போகின்றேன்.

நொண்டிச் சாக்குச் சொல்வதும். செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாமல் சாக்குப் போக்குச் சொல்வதும் நமக்கு வேண்டுமானால் சந்தோசத்தைத் தரலாம். ஆனால். இது மற்றவர் மத்தியில் நம்மைத் தாழ்த்தி விடுவதுடன். ஒரு நல்ல காரியத்தைக் கூட நம்மிடம் ஒப்படைக்க அவர்களைத் தயங்க வைக்கின்றது.

என் நண்பி ஒருத்தி தான் மிகப் பெரிய தவறு செய்தாலும் ஏற்றுக்கொள்ளவேமாட்டாள். ஏதாவது சப்பைக் கட்டுச் சொல்லிச் சமாளிப்பாள். இதை அவள் தன் சாமர்த்தியமாக மட்டுமே எண்ணுகிறாள்.

ஆனால். அவள் இந்தச் செயல் மூலம் தன்னை மற்றவர்களிடமிருந்து அந்நியப்படுத்துவதோடு. அவள் சொல்லும் எந்த ஒருநல்ல விடயத்தையும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாமலும் போகின்றது.

என்னுடன் படித்த. ஒருவன் தான்செய்யும் சிறு பிழைகளுக்குக்கூட மன்னிப்புக் கேட்பான். அவன் ஒரு கணக்கு பிழையாகச் செய்தால் கூட "சேர் நான் முட்டாள். அதனால் தான் என்னால அதைச் செய்யமுடியேல" என்று மன்னிப்புக் கேட்பான். இதனால். அவன் பிழையை உடனேயே மன்னிக்கவே எதிராளிக்குத் தோன்றும்.

நாம் தெரிந்தோ தெரியாமலோ பிழை செய்ய நேரிடுகின்றது. அப்பொழுது நம் தவறுக்கு மன்னிப்புக் கேட்பதே நல்லது. அந்த நேரத்தில் மன்னிப்புக் கேட்பது எமக்கு அவமானமாக இருந்தாலும் நம்மை மற்றவர் மத்தியில் உயர்த்தும் ஒரு பண்பாகவே காணப்படும்.

தவறை மறுப்பவள் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கின்றாள். சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் வாழ்கின்றாள்.

சிலர் அலுவலகத்திற்கு மிகவும் பிந்தி வருவார்கள். காரணம் கேட்டால் 'இன்று சரியான மழை. என்னிடம் குடையும் இல்லை. அதனால்தான் பிந்தி வந்தேன்'. 'இன்றுகாலையில அம்மாவுக்கு வருத்தம் அதனால்தான் என்று சாட்டுச் சொல்லுவார் கள்.

மழை காலம் என்றால் மழை வரும் என்று தெரிந்துதானே இருப்பார்கள். அதற்கேற்ற ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டாமா?

அம்மாவிற்கு வந்த வருத்தம் இவர்பிந்தி வந்த அந்த 10 நிமிடமோ 15 நிமிடமோ கழிந்ததும் மாறிவிடுமா? அம்மாவிற்குத் துணையாக லீவு போட்டுவிட்டு வீட்டில் நின்றிருக்கலாம்.

சாக்குப்போக்குச் சொல்வதைப்போல் முட்டாள்தனம் வேறில்லை. அதன்மூலம் நமது கையாலாகத் தனத்தை உலகுக்குப் பறைசாற்றுகின்றோம்.

பிறர் தவறை மன்னிக்கும் குணமும். நம் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பண்பும் நம்மை உயர்த்துவதுடன் நம் உறவுகளையும் வலுப்படுத்துகின்றன.

15-10-2004

பிரியமுடன் சந்தியா.

## புதுமைப் பெண்ணே வருக!

காலைமுதல் இரவு வரை
கடமை செய்யும்
குடும்பவிளக்குகளே।
ஆணுக்கு நிகராய்
அலுவலகத்தில்
எழுதுகோல்பிடிக்கும்
புதுமைப்பெண்களே।
சோர்ந்துவிடாதீர்கள்।
சுதந்திரம் உங்கள் பிறப்புரிமை।
நீங்கள்
பணம் காய்க்கும் மரங்கள் அல்ல।
குணம் காய்க்கும் மனங்கள்।
நீங்கள்
குழந்தைகளை மட்டும் பெறும்
இயந்திரப் பெட்டிகள் அல்ல।
நாட்டை உருவாக்கும்
நவசக்தி விதைகள்।
மையலில் ஊறி
வட்டமிடும் கணவன்மார்கள்
இனி
சமையலிலும் துணைநின்று
சமத்துவம் பேசட்டும்।

நன்றி:
சுமங்கலி.

# மாணவிகள் விடுதியில் பல வசதியீனங்கள்...

**யாழ்**. பல்கலைக்கழக ஆனந்தக்குமார சுவாமி பெண்கள் விடுதியின் புதிய கட்டடத்தில் தங்கியிருந்த மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்துவந்தனர். உரியவர்களிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறியபோதும் அதற்கான தகுந்த நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால், சுகாதாரப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி திடீரென மாணவிகள் யாவரும் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அறிந்து விடுதியின் நிலையை நேரில் காண்பதற்காகச் சென்றிருந்த போது அங்குள்ள பல குறைபாடுகள் வெளிச்சத்துக்கு வந்தன.

யாழ்.பல்கலைக்கழக மாணவிகளின் விடுதி


விடுதியின் முகப்புத் தோற்றம்

வளாகத்தில் 2 ஆவது கட்டடத்தொகுதி விடுதியானது சென்றவருடம் திறந்துவைக்கப்பட்டது. 54 அறைகளில் 106 மாணவிகள் தங்கவைக்கப்பட்டனர். அடிப்படை வசதிகள் ஏதுமற்றநிலையில் மிகுந்த அசௌகரியங்களைத் தொடர்ந்தும் அனுபவித்து வந்த மாணவிகள், பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட சம்பந்தப்பட்ட பலருக்கும் தம நெருக்கீடுகளை தெரிவித்திருந்தபோதும் இதுவரை காலமும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அங்குள்ள மாணவிகள் கூறுகின்றனர். இந்நிலையில், திடீரென அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 18ஆம் திகதி பரீட்சைக்கான திகதிகள் குறிக்கப்பட்ட நிலையில், திருமலை, வன்னி, மன்னார், மட்டக்களப்பு... என வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவிகள் தங்குவதற்கு உதவி இன்றித் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

குமாரசுவாமி விடுதி வளாகத்தில் உள்ள 2 கட்டடத் தொகுதிகளுக்கும் ஒரு காவலாளி மட்டும் இரவில் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் முன்வாசலில் மட்டுமே காவல் இருப்பதனால் 2 ஆம் கட்டடத் தொகுதியில் வரும் ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்கென காவலாளி இல்லை. ஏனெனில், விபரீதங்களை ஏற்படுத்தக் கூடிய வகையிலேயே புதிய கட்டதொகுதியின் கட்ட அமைப்பு உள்ளது. காப்பணை அற்ற Flats, கிறில்கள் - கிறில்கள் ஏதுமற்ற வெறும் கண்ணாடியிலான யனனல், கதவு, அறைகளுக்குள் உள்நுழையக்கூடியவாறு நான்கு பக்கமும் மேலதிக சிறிய கதவுகள் என்பனவற்றுடன் படிக்கும் அறை திறந்த வெளியில் பாதுகாப்பற்றமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றினூடாக, உள்நுழையும் வசதிகள்... இவற்றைப் பயன்படுத்தி பல தடவைகள திருடர்கள் உள்நுழைய முயற்சித்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

4 ஆம் மாடிக் கட்டடத்திற்கு கழிவுநீர் வெளிச்செல்வதற்கென சிறியகுழி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. அக்குழி நிரம்பிவெடித்ததும் அதற்கான குழாயகளின் வழியே பொலித்தீன் கட்டப்பட்டு, அதனை விடுதி வளாகத்தினுள்ளே விட்டுள்ளனர். இதனால், கழிவுநீர் யாவும் தேங்கிநிற்கும் நிலை உருவாகியுள்ளது. அத்துடன், சிறிய மலசல குழிகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அவையும் உடைந்துள்ளமையால், துர்நாற்றம் பரவி சுவாசிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இரண்டு நாள்களுக்கு ஒருதடவை சுத்திகரிக்க வேணடியநிலையுள்ளபோதும், ஒருவரும் சுத்திகரிக்க வருவதில்லை. கழிவுகள் வெளிச்செல்வதனால் சுகாதாரநிலை மோசமாகின்றது. தண்ணீர்ப் பாவனையைக் குறைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும், அது முடியாத காரியமாகும. மாணவிகள் கழிவுப்பொருளகளைச் சுகாதார முறைப்படி வெளியேற்றுவதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. காலையிலும் மாலையிலும் மலசல கூடத்தினைத துப்புரவு செய்வதற்கெனப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. தங்கியிருக்கும் மாணவிகளே அட்டவணையிட்டு செயற்பட வேண்டியநிலை காணப்படுகின்றது. அத்துடன, தண்ணீர்ப் பாவனையைக் குறைக்கும்படித் தண்ணீர் பெறுகையும் தடைசெய்யப்பட்டுள்ளது.

விடுதி அறைகள் ஒவ்வொன்றும் அளவில் வித்தியாசப்பட்டும் அடிப்படை வசதிகளற்றும்

**பார்த்ததும் எழுதுவதும்...**

உள்ளன. ஓர் அறையில் ஒரு மாணவி மட்டுமே இருக்கக்கூடிய நிலையில், இங்கு 2,3 பேர் தங்கவிடப்பட்டுள்ளனர். அதற்கேற்ப தளபாடங்கள். மின்வசிறி ஏதுமின்றி 2 தட்டுக்களைக் கொண்ட கட்டில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்த அமைவிடத் திட்டமிடலைப் பார்க்கும்போது கொழும்பு விடுதிகளைப்போன்று எண்ணத் தோன்றுகின்றது.

இதுதொடர்பாக மாணவி ஒருவர் குறிப்பிடுகையில் -

விடுதிக்கு வெளியில் புகையிரதப் பாதை வழியே அடிக்கடி ஒருவர் நிர்வாணமாக நிற்பதுண்டு. அதைப் பற்றித் தெரிந்தும் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அடுத்து ஒரு மாணவி குறிப்பிடுகையில் -

நாங்கள் எமது பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்கவேண்டியவர்கள் யாவருக்கும் அறிவித்துள்ளோம். ஒருவரும் இதைப்பற்றி எந்த முடிவும் கூறவில்லை. பல்கலைக்கழக வைத்திய அதிகாரி மற்றும் துணைவேந்தர் எல்லோரும் விடுதியை மூடும்படி கூறியுள்ளனர். அதனால், மாணவிகள் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும்நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் அறை எடுப்பது என்பது எப்படி உடன் இயலுமான காரியம்? இறுதிவருடப் பரீட்சைக் காலமாக இருப்பதனால் ஒருநிலையில் இருந்து கற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுற்றாடல் துர்நாற்றமாக உள்ளது. தண்ணீர்ப் பெருக்கம் நுளம்புகளை உற்பத்திசெய்கின்றது. எமக்கு ஒருதீர்வு சரியாக வரவேண்டும் என்பதனையே எதிர்பார்க்கின்றோம் - என்றார். ★

**- நர்த்தகி -**


கழிவுநீர் தேங்கும் சிறிய குழி


இரும்புக் 'கிறில்' அற்ற யன்னல்


சிறிய கழிப்பறைக் குழிகள்

# அரங்க செயற்பாட்டுக் குழுவின் தெருவெளி அரங்க ஆற்றுகை

யாழ்ப்பாணம்,நவ.4

குடாநாட்டின் பல பகுதிகளிலும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் தெருவெளி அரங்காற்றுகைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'ஊர் உள்ளம் உயர்தல்' என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த ஆற்றுகைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் மக்களின் தேவைகள், பிரச்சினைகளை அறிந்து, அவர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் நோக்கில் அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், தொல்புரம், சித்தன்கேணி, மூளாய் போன்ற இடங்களில் தெருவெளி அரங்க ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இவ்வாற்றுகையில் மக்கள் ஆர்வத்தோடு பங்குபற்றி வருகின்றனர். வீதிகள் புனரமைப்பு, குடிதண்ணீர், குடியிருப்பு, சுகாதாரம், மலசலகூடம், விளையாட்டு மைதானம், பொது சனசமூக நிலையம் போன்ற தமது அடிப்படைத்தேவைகளைப் பற்றியும், இளைஞர்கள், யுவதிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினை, கடற்றொழிலாளர்களுக்கான பாஸ் அனுமதி போன்றவற்றினால் தாம்படும் இன்னல்கள் என்பவை பற்றியும் அவர்கள் வெளிக்காட்டி வருகின்றனர். (ஐ)

# கற்றல் இறுவட்டுத் தொகுதி தயாரிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.4

வடககு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலை மாணவர்களுக்கான கணித பாட தமிழ்மொழிமூலக்கற்றல் இறுவட்டுத் தொகுதியொன்றைத் தயாரிக்கும் பணியை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் அமைந்துள்ள கணித மூலவள நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது

நேற்றுமுன்தினம் காலை 9மணியளவில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரத்தினம், இறுவட்டுத் தயாரிக்கும் பணியை பார்வையிட்டு அனைவரையும் பாராட்டினார்.

இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதற்காகக் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர் வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை கணித மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலய கணித ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (4-12)

**தீபாவளி தினத்தை முன்னிட்டு**

# உயர்தர மாணவரிடையே விவாதச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.4

தீபாவளி தினத்தையொட்டி மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழுவினர், யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் விவாதச் சுற்றுப்போட்டியினை நடத்தவுள்ளனர்.

மாணவர்களின் பேச்சாற்றல், மொழிவிருத்தி என்பவற்றை விருத்திசெய்யும் நோக்கில் நடத்தப்படவுள்ள இந்தப்போட்டியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டும் பங்குபற்றமுடியும்.

விவாதச் சுற்றுப்போட்டிகள் யாவும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர் வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப்பெறும் அணியினருக்குப் பரிசில்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கப்படவுள்ளன. ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். இப்போட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையொன்று பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே, போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலை மாணவர்கள் தமது வரவினை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பங்களை உடனடியாக 'கந்த.சத்தியதாசன், மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு, அமைப்பாளர், புத்தூர்கிழக்கு, புத்தூர்' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டிகள் தீபாவளி தினத்தன்று பரிசளிப்பு நிகழ்வில் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெறும். (4-13)

## வாசகர் திருமுகம்

# மொழி கற்பித்தலில் பக்குவம் தேவை

இங்கே வா, ஒரு மணித்தியாலத்தில் உன்னைச் சரளமாக ஆங்கிலம் கதைக்கச்செய்கின்றோம்.

இங்கே வா, மூன்று மணித்தியாலத்தில் உன்னைச் சரளமாக சிங்களம் கதைக்கச்செய்கின்றோம்.

இங்கே வா, தொண்ணூறு நாள்களில் உன்னை ஆங்கிலத்தில் சரளமாக எழுத, பேச, வாசிக்கச் செய்கின்றோம்.

இப்படியான விளம்பரங்களை அண்மைக்காலமாகப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். மொழியாற்றலானது காலநேர வர்த்தமானங்களால் வரையறுக்கமுடியாத ஒன்றாகும். அதனை எப்படி ஒரு சில மணித்தியாலங்களுக்குள் - ஒரு நேர வரையறைக்குள் - கற்பிக்கமுடியும்? இது விந்தையல்லவா? ஒரு மொழியானது கற்கவோ, கற்பிக்கப்படவோ முடியாதது. அது இயல்பாக உள்வாங்கப்படவேண்டும் (**A Language cannot be learnt or taught. It should be acquired**) இது மொழியியலாளர்களின் ஆராய்ச்சி முடிவாகும். அப்படியிருக்க, மேலேயுள்ள விளம்பரங்களுக்கு என்ன அர்த்தம்? A-9 திறப்பின் பின்னர் உற்சவ காலத்துக்கு முளைக்கும் மளிகைக் கடைகளா இந்த மொழி கற்பிக்கும் நிறுவனங்கள்? ஆங்கில, சிங்கள மொழியில் பின்தங்கி நிற்கும் எமது மாணவர்களுக்கு இந்த நிறுவனங்கள் ஏதோ ஒரு வகையில் நன்மைசெய்கின்றன என்பது உண்மைதான். ஆனால், எதையும் மிகைப்படுத்தி விளம்பரங்களால் மாணவர்களைக் கவர்வது வெறும் வியாபார நோக்கமென எண்ணத் தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட சொற்தொகுதியைக் கொடுத்து இந்தச் சொற்களைத்தான் நீங்கள் பேசவேண்டும்,இப்படித்தான் வசனங்களை அமைக்கவேண்டும் எனக் கற்பிப்பது எமது மாணவர்களின் சுய சிந்தனைக்குக் கட்டுப்பாடு போடும் செயலல்லவா? எமது மாணவர்களைச சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக்கும் செயலல்லவா? எமது மாணவர்களையும் பெற்றோர்களையும் வெறும் ஏமாளிகளாகவும், எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும் ஆக்கும் செயலல்லவா?

அறிவாற்றல் மிகுந்த பெற்றோர்களே! சரளமான மொழிப்பயன்பாடானது பணத்தாலோ அன்றி, நேரக்கட்டுப்பாட்டாலோ சம்பாதிக்கக்கூடிய ஒன்றல்ல. அது சுதந்திரமானது; தன்னிச்சையானது; இயல்பானது; கடல்போல எல்லையற்றது. மற்றைய பாடங்களைப் பொறுத்தமட்டில் மேற்கூறிய விளம்பரங்கள் சாத்தியம். அவை வரவேற்கப்படலாம். உதாரணமாகக், கணிதத்திலுள்ள இருபடிச் சமன்பாட்டையோ அல்லது விஞ்ஞானத்தில் வருகின்ற திணிவுக் காப்பு விதியையோ நாங்கள் சில மணித்தியாலங்களுக்குள் கற்றுத் தெரிந்துவிடலாம். ஆனால், மொழியைப் பொறுத்தமட்டில் அது சாத்தியமாகாத ஒன்று.

"எங்களது பிழைப்பில் மண்ணை அள்ளிப்போடுகிறான் பாவி" என்று சம்பந்தப்பட்டவர்கள் என்மீது கோபப்படலாம். ஆனால், நான் எனக்குச் சரியென்று தோன்றுவதைத்தான் எழுதுகின்றேன். எனவே, என் அன்பான மொழி கற்பிக்கும் நிறுவனங்களே! உங்கள்சேவை எங்களுக்கு நிச்சயம் தேவை. ஆனால், உள்ளதை உள்ளபடி கூறி உங்கள் சேவையை வழங்குங்கள். ஏனென்றால், உங்கள் நிறுவனங்களின் சான்றிதழ்களை வைத்திருக்கும் மாணவர்கள் பலர் இன்னமும் ஞானசூனியங்களாகவே இருப்பதை நான் அறிவேன். சான்றிதழ்களால் அவர்களது பெட்டகங்கள் நிரம்பினால் மட்டும் போதாது. முயற்சிக்குக் கணிசமான பயன்வேண்டும். எமது கல்விப் பாரம்பரியத்துக்குள் சாத்தான்களைப் புகுத்திவிடாதீர்கள். ஏனென்றால், "தீராத வியாதியா, பேய், பில்லி சூனியமா, பரீட்சையில் தோல்வியா, காதலில் தோல்வியா விரும்பிய பெண்ணைக் கைப்பிடிக்கவேண்டுமா? ஆண்மைக்குறைவா ...இன்றே நாடுங்கள் ". இதுபோன்ற விளம்பரங்களுக்கும் உங்களது விளம்பரங்களுக்கும் நாளடைவில் வித்தியாசமில்லாதுபோய்விடும். இவற்றைக் கருத்தில் எடுத்து சுயவிமர்சனம் செய்து திருந்தவேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே இதனை எழுதுகின்றேன்; மாணவர்களின் நன்மை கருதி.

**- யாழ். வதிரிவாசன் -**

## முழங்காவிலில் வியாழனன்று உதைபந்தாட்டப் போட்டி

பூநகரி,நவ.4

மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான பூநகரிப் பிரதேச அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளைமறுதினம் 6 ஆம் திகதி முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி 2 மணிக்கு விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இதில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கிளி.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா, பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (8-401)

# தமிழீழக் காவல்துறையின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்குமாறு பாதசாரிகளிடம் வேண்டுகோள்

வீதிகளில் இடம்பெறும் விபத்துக்களைத் தடுப்பதற்கு காவல்துறையினரால் அறிவுறுத்தப்படும் விடயங்களைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ காவல்துறையினர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதசாரிகளாகிய நீங்கள் உங்கள் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்காக வீதிகளைப பாவித்து வருகின்றீர்கள். வீதிகளைப் பாவிப்பதற்குச் சில விதிமுறைகள் உள்ளன. இவற்றைப் பின்பற்றி வீதிகளைப் பாவிக்குமாறும், விபத்திலிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொளவதற்கு எம்மால் அறிவுறுத்தப்படும் விடயங்களை கடைப்பிடித்து நடக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- நீங்கள் வீதியில் நடக்குபோது வீதியின் வலது பக்கமாக நடந்து செல்லுதல் வேண்டும்.
- வீதியில் நடந்து செல்லும்போது ஒருவருக்குப் பின் ஒருவராக நடந்து செல்லுதல் வேண்டும்.
- பாதசாரிக் கடவை அல்லது நடைபாதை இருந்தால் அவ்விடத்தில் இருவருக்குமேல் பக்கம் பக்கமாக நடந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- வீதியைக் கடந்து செல்ல வேண்டுமாயின் பாதசாரிக்கடவையைப் பாவித்துக் கடந்து செல்லுதல் வேண்டும் வளைவுநெளிவான இடங்களிலும், சந்திகளிலும் வீதியைக் கடந்து செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- பாதசாரிக் கடவைகள் இல்லாதவிடத்து வீதியைக் கடந்து செல்ல வேண்டுமாயின் வாகன போக்குவரத்து நிலை பற்றித் தெளிவாக தெரிந்து கொண்ட பின் வலம் பார்த்து, இடம்பார்த்து, திரும்பவும் வலம் பார்த்து விரைவாகக் கடந்து செல்லுதல் வேண்டும்.
- நிறுத்தப்பட்டிருக்கும் வாகனம் ஒன்றின் பின்னே அல்லது முன்னே கடந்து செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

இரவில் நீங்கள் வீதியில் நடந்து செல்லும்போது மென்னிற ஆடை அணிந்து செல்லுங்கள் அல்லது ஏதாவது ஒரு வெள்ளைப்பொருள உங்கள் கையில் கொண்டு செல்லுதல் வேண்டும். ஏனெனில் வாகன சாரதிகள் தூரத்தில் நீங்கள் வருவதைக் கண்டுகொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

தமிழீழக் காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் பாதசாரிகளுக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (8)




தற்போதைய துணுக்காய்ப் பிரதேச செயலர்நாகலிங்கம் நந்தகுமார் ஸ்கந்தபுரத்தில் பணிபுரிந்து பதவியுயர்வு பெற்று புதிய பதவியில் கடமையாற்றுகின்றார். இவரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வினை ஸ்கந்தபுரம் "ஆற்றல்" குழுமம் மற்றும் அக்கராயன் பிரதேசப் பொது அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து இல I அ.த.க. பாடசாலையில் நடத்தின.

இந்தப் பாராட்டு விழாவின்போது அக்கராயன் மகாவித்தியலாய ஆசிரியை திருமதி சபாரட்ணம் பிரதேச செயலருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:ஸ்கந்தபுரம் செய்தியாளர்)*

## புதுக்குடியிருப்பு சந்தை வர்த்தகர்களுக்கு காவல்துறையினர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு,நவ.4

புதுக்குடியிருப்புச் சந்தை வணிகர்களுக்கு காவல்துறையினர் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றினை கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் சந்தைப்பகுதியில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு காவல்துறைப் பொறுப்பாளர் வ.சுகிர்தனன், புதுக்குடியிருப்பு சந்தைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

சந்தைப்பகுதிச் சுகாதாரம், குற்றச்செயல், வியாபார நிலையங்களில் தொழிலில் ஈடுபடும் வியாபாரிகள் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் விதம், தரக்கட்டுப்பாடு, விலைக்கட்டுப்பாடு, கழிவுகள் அகற்றல், பொதுமக்களின் அசௌகரியங்களை எவ்வாறு தவிர்ப்பது, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், வணிகச் சட்டம் என்பனவற்றைப் பற்றியும், வீதிப் போக்குவரத்து இடையூறு இன்றி எவ்வாறு பொருள்களை சந்தைக்குள் கொண்டு வருவது, வெளியே கொண்டு செல்வது என்பது பற்றியும் மழையினால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் பற்றியும் கருத்துரைகள் வழங்கப்பட்டன. (8-353)

## புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதி பயணம் செய்ய முடியாத நிலையில்!

### முல்லைத்தீவு ஊடாகவே சகல போக்குவரத்துகளும்!!

புதுக்குடியிருப்பு,நவ.4

தற்போது பெய்துவரும் மழையினால் புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதி பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. முள்ளியவளை செல்வதற்கு முல்லைத்தீவு ஊடாகவே செல்லவேண்டியுள்ளது.

வேம்படி வீதியில் சிற்றாறு பெருக்கெடுத்து பாய்வதால் போக்குவரத்துச செய்ய முடியாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்: இப்பகுதி வயல்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் உப்பட்டிகள் நீரில் அடித்துச் செல்லப்படுவதுடன், பெருமளவு நீர் வயல்களின மேலாகத் தொடர்ந்து பாய்வதால் வயல்களில் வேலைகள் எதுவும் செய்ய முடியாத நிலையும தோன்றியுள்ளது.

அண்மையில் இவ்வீதியில் பாரிய மூன்று பாலங்கள் 'நிக்கொட்' நிறுவன நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு திறந்து வைத்தும் இவ் வீதியை மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது போக்குவரத்துக்கள் யாவும் முல்லைத்தீவு ஊடாகவே நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-353)

## வட்டக்கச்சி எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு

வட்டக்கச்சி,நவ.4

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் பிரதான மண்டபத்தில், வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை மாயவனூர் கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் க.தர்மசூரியர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து மக்கள் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. தொடர்ந்து வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழ நிலவன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினார்கள். இறுதியாக வட்டக்கச்சியின் பிரதான பிரச்சினையான, பிரதான வீதியை திருத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (8-405)




## வழி தவறிய பாடசாலைச் சிறுமி காவல் பணிமனையில் ஒப்படைப்பு

புதுக்குடியிருப்பு,ஒக்.4

வழி தவறிய பாடசாலைச் சிறுமி ஒருத்தி கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத் தீவு பேருந்து நிலையத்தில் அநாதரவாக நின்றதை அறிந்த காவல்துறையினர் உடன் அவ்விடத்துக்கு வந்து சிறுமியை கூட்டிச்சென்று தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

முகமாலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வந்த பேருந்தில் அச்சிறுமி வந்ததாகவும் புதுக்குடியிருப்பு அண்டிய பகுதியில் பஸ்ஸில் ஏறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 9 வயது மதிக்கத்தக்க இச்சிறுமி பாடசாலைச் சீருடை அணிந்திருந்தாள்.

சிறுமியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் புதுக்குடியிருப்பு காவல்துறையினருடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (8-353)

## குரவில் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செ.மேகநாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கள விளக்கினை அம்மன் ஆலயப் பிரதம குருவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் ஏற்றிவைத்தனர்.

புதிய கட்டடத்தினை வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவை வெட்டி வைபவரீதியாக திறந்து வைத்தார். தொடர்ந்து பெயர்ப்பலகையினை முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ந.குருகுலராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், நாடாளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வலயக் கல்விப்பணிப்பாளர் ந.குருகுலராசா ஆகியோர் உரையாற்றினார்கள்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.பரமேஸ்வரன், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பொது மக்கள், தேசிய எழுச்சி பேரவையினர் எனப் பெருமளவானோர் இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். (8-353)

## சுகாதாரமற்ற முறையில் இயங்கும் கற்சிலைமடுப் பொதுச்சந்தை

ஒட்டுசுட்டான்,நவ.4

கற்சிலைமடுவில் அமைந்துள்ள பொதுச் சந்தை சுகாதாரமற்ற முறையில் இயங்கி வருவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், பேராறு, கருவேலன் கண்டல், புளியங்குளம், கூழாமுறிப்பு பண்டாரவன்னி, வித்தியாபுரம் என்றும் கிராமங்களுக்குரிய இச்சந்தை கட்டட வசதி இன்றி சிறிய ஓலைக் கொட்டிலில் இயங்குகின்றது.

மீன், இறைச்சி ஆகியவை விற்பனை செய்ய தனியான இடமின்மையாலும், கழிவுகளை ஆங்காங்கே வீசப்படுவதாலும், சந்தையில் பொருள்களை வாங்கவருபவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சந்தையினை நடத்துவோர் சந்தையை துப்புரவாகவும் சுகாதாரமுறையிலும் வைத்திருப்பதில் கவனம் செலுத்தியுதவ ஆவன செய்ய வேண்டும் என மக்கள் வேண்டுகின்றனர். (8-341)

## பிரயாணிகளை ஏற்றாமல் அடிக்கடிவிட்டுச் செல்லும் பேருந்து

ஒட்டுசுட்டான்,நவ.4

காலை வேளையில் நெடுங்கேணியிலிருந்து கற்சிலை மடு ஊடாக புதுக்குடியிருப்பு சென்றடையும் பேருந்து சில நாள்களாக பிரயாணிகளை ஏற்றாமல் செல்வதால் மக்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.

காலை 8.10 மணிக்கு நெடுங்கேணியிலிருந்து கற்சிலைமடு வந்தடையும் பேருந்தில் பயணிப்போர் கூடுதலாகப் பயணம் செய்யும் நேரங்களில் இடையிடையே நிற்கும் பிரயாணிகள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் அவசர நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், அலுவலகங்களுக்குச் செல்வோர், யாழ்ப்பாணம் செல்வோர் எனப் பலரும் இப்பேருந்தினை நம்பியே இருக்கின்றனர். அத்துடன், ஒரேயொரு பேருந்து மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இப்பேருந்து செல்லும் வீதி குண்டும் குழிகளாகவும், பாலங்கள் உடைந்துள்ள நிலையிலும் சீரற்று உள்ளது. இதனால் இந்தப் பேருந்தில் மூச்சுவிட முடியாத அளவிற்கு பிரயாணிகள் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் விபத்துக்களும் அதிகரிக்கின்றன.

எனவே, காலை நேரத்தில் பிரயாணிகளின் நன்மையைக் கருத்திற்கொண்டு மேலும் ஒரு பேருந்தினை சேவையில் ஈடுபடுத்துமாறு பேருந்துக் கழகத்தின்ன மக்கள் கேட்டுள்ளனர். (8-341)

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் பூநகரி பரமங்கிராய் பாடசாலை

பூநகரி கோட்டப் பாடசாலைகளில் ஒன்றான பரமங்கிராய் அ.த.க. பாடசாலை அடிப்படை வசதிகள் அற்றநிலையில் இயங்கிவருகின்றது.

தரம் - 1 முதல் தரம் - 5 வரை உள்ள இந்தப் பாடசாலையில் 60 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விபயில்கின்றனர்.

பாடசாலையின் கூரைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளமையால் மழை காலங்களில் வகுப்பறைகளில் மழைநீர் தேங்கி நிற்கின்றது.

1991ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயந்த இப்பாடசாலை, 2003 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த இடத்தில் இயங்கிவருகின்றது. எனினும், இதுவரை எந்த ஒரு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியும் இப்பாடசாலைக்கு கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-403)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

14 வயதுப் பிரிவு

☆ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

☆ செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

16 வயதுப் பரிவு

☆ செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம். (10-86)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 626 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 02-11-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4065560-4082258 |

வெற்றி இலக்கங்கள்

02 10 20 44

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா.17,85,400/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 26,05,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,67,422 | 10/- | 36,74,220/- |
| 2.இலக்கங்கள் | 33,699 | 20/- | 6,73,980/- |
| 1 இல + லக்கினம் | 33,323 | 30/- | 9,99,690/- |
| 2.இல + லக்கினம் | 3,059 | 100/- | 3,05,900/- |
| 3.இலக்கங்கள் | 889 | 500/- | 4,44,500/- |
| 3.இல + லக்கினம் | 88 | 5,000/- | 4,40,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 17,85,400/- | - |
| மொத்தம் | 4,38,489 | - | 80,68,540/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 80,68,540/-

தொடர் இல. 5048089 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 05ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4068126-7-86
4066061-3-04
4075010-7-92
4078224-2-87
4070523-0-06


## பல வருடங்களாகத் திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம்,நவ.4

நீர்வேலி வடக்கில் உள்ள கோரளிவத்தை ஒழுங்கை 15 வருடங்களாகத் திருத்தப்படாமல் பாரிய சேதமடைந்து காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியால் மழை நேரத்தில் முழங்கால் வரை வெள்ளம் பாய்ந்தோடுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக உரியவர்களிடம் பல தடவை முறையிட்டுள்ள போதும் இதுவரை எவ்வித நடவடிகையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பொது மக்கள் கூறுகின்றனர். (3-12-190)

## ஆர்ப்பாட்டம்

புத்தளம்,நவ.4

வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து 14 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவுகூர்ந்து கடந்த மாதம் 29 ஆம் திகதி புத்தளம், தில்லையடியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

"இடம்பெயர்ந்த மக்களின் நலனை முன்னிட்டு உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் செய்யப்படல் வேண்டும்",

"வடபகுதி முஸ்லிம்களைத் தனியான தரபபினராக அரசு அங்கீகரிக்க வேண்டும்.",

"சமாதானப் பேச்சில் முஸ்லிமகள் தனித் தரப்பினராகக் கலந்துகொள்ள வேண்டும்."

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை இடம் பெயர்ந்த முஸ்லிம மக்கள் நடத்தினர். (10-186)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பதிவுக்கான திகதி நீடிப்பு**
**கல்வியாண்டு 2003/2004**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2003/2004 கல்வியாண்டுக்கான வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவுசெய்வதற்குரிய காலஎல்லை 2004.11.15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

(சி-38680) - துணைவேந்தர்.

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 1.30 மணிக்கு உடுப்பிட்டி இசையாசிரியை திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (10-173)

## அறிவித்தல்

### அற்றோனிக் தத்துவ உறுதி இரத்துச் செய்தல்

கொழும்பு – 15, சென். ஜேம்ஸ் வீதி, இல. 66/8 ஐச் சேர்ந்த பூமலர் தர்மலிங்கம் ஆகிய நான் உடுப்பிட்டி கனகரட்ணம் பாலசுப்பிரமணியம், ஈஸ்வரி மில், உடையார் வீதி, உடுப்பிட்டி என்பவருக்கு 1997 பங்குனி 6 ஆம் திகதி நொத்தாரிசு பீ. குமாரசாமி மூலமாக இல. 6398 இல் முடித்த உறுதியில் வழங்கப்பட்ட அற்றோனிக் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்தும் அழித்தும் விடுகிறேன் என்பதை இந்த அறிவித்தல் மூலம் தெரியத்தருகிறேன்.

(C/38677)(42-15-46) இப்படிக்கு, **பூமலர் தர்மலிங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்

**பொன்னையா வேணுகோபால வாணிதாசன்**

அவர்கள் 27.10.2004 அன்று காலமாகிய செய்தி எமக்கு மனவேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கின்றது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம.

யா/வியாவில் சைவ வித்தியாலயம்,
காரைநகர். (38274)(42-46-15)

அதிபரும்,
ஆசிரியர்களும்,
மாணவர்களும்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 – 04 – 1933



இறப்பு 07 – 11 – 2001

அமரர் **சின்னப்பொடியன் கதிரன் (V.C.)**

திதி: 04.11.2004

மூன்று ஆண்டுகள் முடிந்தும் – எமக்குத்
தோன்றிடும் நாளும் உம் எண்ணம்.
உங்கள் ஆத்மசாந்திக்கு வேண்டுகிறோம்.

கைதடி மேற்கு,
கைதடி. (38278) (24-42-15-46)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.


## ENGLISH CLASSES FOR

- Students aspiring for higher studies
- Undergraduates
- Graduates
- Officers
- Professionals

▶ CERTIFICATE IN ENGLISH
▶ DIPLOMA IN ENGLISH

| | | | |
|---|---|---|---|
| Week Days 8.30 - 12.30 | Monday | Wednesday | Friday |
| Week Ends | 2.00-5.00 p.m. | | |
| Duration | Three.months | | |

Basic Computer skills taught for week days students.

▶ O/L 2004 English Literature Revision classes on.

| | | |
|---|---|---|
| Mondays | Wednesdays | 4.00 - 6.00 p.m. |

▶ New Batch of IELTS commences in the first week of November.

Registrations ON..... Principal.

**LONDON ENGLISH COLLEGE**
No. 105, Arasady Road, Jaffna.
T.P.: 021-222-5889, 0777-252180, 0776-303539
E-mail: lecjaffnabranch@yahoo.com

(C-38679)(42-15-46)


## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா அவர்கள் 03.11.2004 புதன்கிழமை காலை காலமானார்.

அனனார் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகமமா, இராசலட்சுமி, அன்னம்மா, காலஞ்சென்ற இராஜசுந்தரம் மற்றும் பாலசுந்தரம் (மேலதிக மாவட்டப் பதிவாளர், கச்சேரி, மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிற்றம்பலம் (பாறின்), மகேஸ்வரி, பொன்னம்பலம், பேரமபலம் (காணி மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கச்சேரி, யாழ்பபாணம்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, நகுலேஸவரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌரிமாலா (பாறின்), சணமுகலிங்கம், ஜெயராணி, ஜெயகௌரி, சூரியகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் பூபாலசிங்கம் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌசி, குருபரன், ஹரிகரன், தினேஸ்வரன் (தினா), சிவகுமார், நிரஞ்சனி, ரகுவதனன், ரூபவதனன், ஜெயவதனி, ஹேமவர்ணன், பவீனா, சஞ்சீவன், இராஜசெல்வி, அச்சகன், துர்க்கா, சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் தச்சன்பிட்டி இந்து மயானததிற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி. (38280)(42-15-46)

தகவல்:
பேரம்பலம், பொன்னம்பலம் (மகன்).

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## 2005 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் 01.01.2005 தொடக்கம் 31.12.2005 வரையான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் விவரக் கேள்விகளை இணைப்பிரதிகளில் தயாரித்து, ஒரு பிரதியை கடித உறையிலிட்டு, அரக்கு முத்திரையிட்டு, செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலமும், 2 ஆவது பிரதியை பி. உ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இக்கேள்விகள் 15.11.2004 ஆம் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் நண்பகல் 12 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

| கேள்வி விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் | பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|
| 1. மீன்சந்தை, வல்வெட்டித்துறை (நகராட்சி மன்ற எல்லை முழுவதும் அறவிடலாம்) | 23,000/= | 1000/= | 100/= | 15% |
| 2. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (முழுவருடமும்) | 51,000/= | 1000/= | 100/= | 15% |
| 3. வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடை | 140,000/= | 1000/= | 100/= | 15% |
| 4. மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை | 51,000/= | 1000/= | 100/= | 15% |

கேள்வித் தொகையுடன் மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் செலுத்தப்படவேண்டும். மேற்படி வைப்புப்பணமும், கேள்விப் படிவக்கட்டணமும் பணமாகச் செலுத்தப்படுவதன் பேரில் 05.11.2004 தொடக்கம் 12.11.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும். படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. எந்தக் கேள்விகளையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண உரிமையுண்டு. மேலதிக விவரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
02.11.2004 (சி-38684)(34-42-46-15)

செ.திருஞானசம்பந்தர்
செயலாளர், நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

# வீதிகளில் விபரீதம்.....!

"நாங்கள் சினிமாவில பாக்கிறதை நேரில பார்த்த மாதிரி இருந்திச்சு".

இது விபத்தில் காயமடைந்த ஒரு பெண்ணின் விவரிப்பு.

"எப்பிடி நாங்கள் உயிர் பிழைச்சோம் என்பதே அதிசயம்தான்."

இது மற்றொரு வயோதிபரின் முனகல்.

இப்படி இன்னும் எத்தனையோ முனகல் ஒலிகள்....

இவை அனைத்தும் எமது பிரதேசத்திற்கு சகஜம் என்ற நிலைவந்துவிட்டது. நாளுக்கு நாள் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. வீட்டிலிருந்து கிளம்பும் ஒருவர் மீண்டும் உயிருடன் வீடு திரும்புவதற்கான வாய்ப்பு அருகிவருகிறது.

விலை மதிப்பற்ற உயிர்களும் பெறுமதியான உடைமைகளும் வீதி விபத்துக்களில் அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்குச் சாரதிகளின் பொறுப்பற்ற தன்மை மட்டுமா அல்லது போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணுவதற்குப் பொறுப்பானவர்களின் அசமந்தப்போக்கா? எதுவாயினும் நாளாந்தம் உயிர்கள் காவு கொள்ளப்படுவது மட்டும் தொடர்கிறது.

வீட்டிலிருந்து புறப்படும் ஒவ்வொருவரும் எங்கு எந்த வாகனத்தின் ரூபத்தில் 'எமன்' வருவானோ என்ற ஏக்கத்துடனும் பயத்துடனும்தான் தமது பயணத்தைத் தொடரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.



வீட்டில் உள்ளவர்களும், போனவர்கள் பாதுகாப்பாக வந்துசேரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கவேண்டிய நிலை.

போக்குவரத்து ஒழுங்கு பேணுவதற்குப் பொறுப்பான அதிகாரிகளும் பொதுநிறுவன உத்தியோகத்தர்களும் சாரதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எத்தனையோ கருத்தரங்குகளை நடத்தியும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் வந்தபோதிலும் விபத்துக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. சாரதிகளின் அனுபவமின்மையும் இதற்கு முக்கிய ஒரு காரணியாக அமைகின்றது. மிகக்குறைந்த வயதுடையவர்களும் பாரிய வாகனங்களைச் சர்வசாதாரணமாகச் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. இவர்களை நம்பித் தமது வாகனங்களை ஒப்படைக்கும் உரிமையாளர்களின் பாடு திண்டாட்டம்தான்.

"மினிபஸ் குடை சாய்ந்ததில் 35 பயணிகளுக்குக் காயம்!"

"அரியாலை விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!"

"குளப்பிட்டிச் சந்தியில் விபத்து."

"முறிகண்டி விபத்தில் 2பேர் பலி!"

"மாம்பழம் சந்தியில் பஸ்கள் விபத்தில் சிக்கின."

"ஹன்ரர் தடம்புரண்டு பதினைந்து பேர் காயம்!"

"முந்திச் செல்ல முற்பட்ட உழவு இயந்திரம் கனகபுரத்தில் பாலத்தினுள் பாய்ந்தது"

"வீதியிலிருந்து விலகி வீட்டுக்குள் புகுந்தது மினிபஸ்: மந்திகையில் நேற்றுக் கோரவிபத்து; தீவகக் கல்விப்பணிப்பாளர் மரணம்!"

"மோட்டார் சைக்கிளிலிருந்து வீசப்பட்ட பல்கலைக்கழக மாணவன் மரணம்"



இவை சென்றவாரம் வெளியான பத்திரிகைகளில் அடுத்தடுத்து இடம்பெற்ற செய்தித் தலைப்புக்களில் சில.

இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போதுகூட எமது பிரதேசத்தில் எங்கோ ஒரு மூலையில் சிறுசிறு விபத்துக்கள் நடந்து கொண்டுதான் இருந்தன.

விபத்துக்களின் கோரமுடிவை அறிந்தும் அனுபவித்தும் வருகின்ற சாரதிகளோ, பொதுமக்களோ இனியாவது கவனமாக நடந்துகொள்வோம் என எள்ளளவேனும் நினைப்பதில்லை. விபத்துக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

யுத்தம் ஓய்ந்துபோயுள்ள இந்தவேளையில், எமது மண்ணில் உயிர்களைக் காவு கொள்ள இதுதான் வழியென எமதர்மன் நினைத்து விட்டானோ?

இதற்கு விடையை யார்தான் தருவார்கள்!

விபத்தில் காயமடைபவர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றவுடன் அவர்கள் அவசர சிகிச்சையின் பின் 'வார்ட்டு'களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். அங்கு அவர்கள் படும் இன்னல்கள் எழுத்தில வடிக்க முடியாதவை.

உறவினர் எவருக்கும் தெரியாத நிலையில் 'வார்ட்டில்' முனகிக் கொண்டிருப்பர்.

"நான் புதுக்குடியிருப்பில இருக்கிற நான் எங்க வீட்டில எனக்கு விபத்து ஏற்பட்டது தெரியாது. ஒருக்கா அறிவிச்சு விடுங்கோ"

அழுதவாறு கூறுகிறான் 18 வயது இளைஞன்.

"எக்ஸ் - றே எடுக்கவேணும். கெதியா சாரத்தைக் கட்டிக்கொண்டு வா" இது தாதி ஒருவரின் கடினமான குரல்.

**செய்திக் கட்டுரை**
**பகீரதன்**

அவன் சாரத்துக்கு எத்தனையோ பேரிடம் கேட்கிறான். ஆனால், யாரும் உதவ முன்வரவில்லை. அனுதாபப் பார்வை மட்டும் அவன் மீது விழுகின்றது.

இப்படி எத்தனையோ அவலங்கள். அவர்கள் பயணித்த பாதையை விபத்து மாற்றி அமைத்து விடுகிறது. பலரது வாழ்க்கைப் பாதைகூட மாறிவிடுகிறது.

ஒரு பெண்மணி தனது சிதைந்துபோன வாகனத்தைப் பத்திரிகையில் பார்க்கிறாள். வீதியில் ஓ...வெனக் கதறுகிறாள்.

"நான் கடன்பட்டு வாங்கிய வாகனம். இதை எப்படி நான் தாங்குவேன்; கடனை எப்படி அடைப்பேன்" இது அப்பெண்ணின் ஆதங்கம்.

சாரதிகளே! பொதுமக்களே!

இனியாவது உங்கள் பயணத்தை நிதானமாகவும் விழிப்புடனும் தொடருங்கள். நேற்று நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். நடக்க இருப்பவை நல்லதாக நடக்கட்டும்.

இன்று யாழ். குடாநாடெங்கும் நடைபெற்று வரும் விபத்துக்களைத் தடுப்பதற்கு ஒரு நடவடிக்கையாக, யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளார். அதில் விபத்துக்கள் கூடுலாக ஏற்படுவதற்குரிய காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இவை தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுககப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதேவேளை - வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச்சங்கத்தின் தலைமையகம், பாடசாலை ரீதியாக ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. அத்துண்டுப் பிரசுரத்தில் முச்சக்கர மோட்டார் ஊர்திகள், சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், விபத்துக்களைக் குறைக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவது தொடர்பாகப் போக்குவரத்துத்துறை தொடர்பானவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் சில கருத்துக்களை எமக்கு முன் வைத்தனர்.

**நல்லதுரை குகானந்தராஜா**
**(விசாரணைக்குழு உறுப்பினர், வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் - தலைமையகம்)**

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அநேகமான சாரதிகள், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியே வாகனங்களைச் செலுத்துகின்ற ஒரு நிலை இருந்து வருகின்றது. இவ்வாறானவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுத்தல் நல்லது. உடனடியாகச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேணடும். சாரதிகள் போக்குவரத்து வீதி விதிகளைச் சரியான முறையில் கைக்கொள்ளாமையும் வீதி விபத்து ஏற்படுவதற்கு முக்கிய ஒரு காரணமாகும்.



இன்னொன்றைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும். அதாவது, வீதிகள் சீரில்லாமல் இருத்தல். தற்போது பெய்துவரும் மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளமையும் விபத்துக்களை அதிகரிக்கின்ற முக்கிய காரணியாக உள்ளது.

**இளையதம்பி செல்வராஜா**
**(முன்னாள் செயலாளர், வடபிராந்திய சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் சமாசம்)**

பொதுவாக, வாகனங்களைச் செலுத்துவோர் தங்களது பொறுப்பை உணர்ந்து வாகனங்களைச் செலுத்தாமையே விபத்துக்கள் அதிகரப்புக்குக் காரணம்.



சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்கும்போது பயிற்சியில் செய்துகாட்டும் வீதி ஒழுங்கு முறையைச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவுடன் அநேகமான சாரதிகள் கடைப்பிடிக்காது விட்டுவிடுதல், வருமானத்தை நோக்காகக் கொண்டு வாகனங்களிடையே போட்டிகள், அவசரத் தன்மை, விட்டுக்கொடுக்காத மனப்பான்மை போன்ற செயற்பாடுகளும் விபத்துக்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்குவகிக்கின்றன.

சில வாகன் சாரதிகள் நேரக் கட்டுப்பாட்டை அனுசரிப்பதற்காகக் கூடிய தூரத்தைக் குறைந்த நேரத்திலும் குறைந்த தூரத்தைக் கூடிய நேரத்திலும் கடக்கின்றனர். மற்றும் வாகனங்கள் தரிப்பிடத்தைவிட்டு கண்ட இடங்களிலும் தரித்து நிற்பதும் விபத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

வீதிகள் சீரின்மையும், வீதி ஓரங்கள் ஒழுங்கில்லாமலும் காணப்படுவதனாலும் அநேகமான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வீதி விபத்துக்களைத் தடுக்கவேண்டுமாயின் அனைவரும் ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டும். அத்துடன், மக்களிடையே பரந்தளவில் போக்குவரத்து வீதி விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது சிறந்தது.

**சுப்பர் பரமராசா**
**(எழுதுநர், வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச்சேவைச் சங்கம் - தலைமையகம்)**



அதிகரித்துவரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு வீதியின் விஸ்தீரணம் போதாதுள்ளது. அத்தோடு, அநேகமான வீதிகள் முடக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இந்நிலை போக்குவரத்தில் நெரிசலை உண்டுபண்ணி விபத்துக்களை ஏற்படுத்துகின்றன. சாரதிகள், சாரதியத்தின் பெறுமதியை உணராது மிக வேகமாக வாகனங்களைச் செலுத்துகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. மற்றும் வாகனங்களைத் தேவையைப் பொறுத்துப் பயன்படுத்தாமல் சிலர் பொழுதுபோக்கிற்காகச் செலுத்துகின்றனர். இவ்வாறான வேளைகளில் கண் மூடித்தனமாக வாகனங்களைச் செலுத்துவதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

*

---

# அரியாலைப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,நவ.4

அரியாலைப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு இவ்வருடமும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அப்பிரதேச விவசாய சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து அரியாலைப் பிரதேசத்தின் ஒரு பகுதி இராணுவ ஆக்கிரமிப்பின்கீழ் இருந்து வருகின்றது.

இந்நிலையில்,ஜே/90 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட நெற் காணிகளில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு முன்னோடியாகக் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அரியாலை பார்வதி வித்தியாசாலையில் அரச அதிபர் தலைமையில் விவசாயிகளுடனான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இதனையடுத்து நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியை அரச அதிபர், பிரதேசசெயலாளர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், கண்ணிவெடி அகற்றும் பிரிவின் திட்ட இணைப்பாளர் மற்றும் அரியாலைப் பிரதேச விவசாய சம்மேளனத்தினர் எனப் பலர் அங்கு சென்று பார்வையிட்டதுடன், அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவ அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

இந்நிலையில், அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாதமையால் நெற்செய்கை கைவிடப்பட்டதுடன், இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த உலக உணவுத்திட்ட உதவிப் பொருள்களும் வேறுபகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிலையில், இவ்வருடம் நெற்செய்கையை மேற்கொள்வது சம்பந்தமான நிலையை ஆராயவென அரச அதிபரின் பணிப்பின் பேரில் கடந்த மாதம் 2 ஆம் திகதி சகல தரப்பினருக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர் கடந்த வருடம் அனுமதிக்கப்பட்ட அதேபகுதியில் இவ்வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்குமென சுட்டிக்காட்டப்பட்டதுடன், இருவார காலத்துக்கு நிலைமை தெளிவாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், இன்றுவரை எத்தரப்பினாலும் உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. அத்துடன், கண்ணிவெடி அகற்றும்பணி முற்றுப்பெறவில்லை என்ற அதே காரணத்தை முன்வைத்து இவ்வருடமும் நெற்செய்கைக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது வாழ்வாதார முயற்சி தொடர்ந்து தடைசெய்யப்பட்டுவருவது சம்பந்தமாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளதுடன், இத்தகைய நிலைமை தமது உரிமையை மறுக்கும் மனிதாபிமானமற்ற செயல் என்றும் அவர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். (10-203)

---

# அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது

யாழ்ப்பாணம்,நவ.4

கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால வாணிதாசனின் அஞ்சலி நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராதாகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமரரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி உரைகளை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்படப் பலர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் பெற்றோர்கள் வேலணைக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(10-204-88)

புஷ் வெற்றிபெற

# இலங்கைத் தொழிலதிபர் விளம்பரப் பிரசாரம்

கொழும்பு,நவ.4

இலங்கைத் தொழிலதிபர் ஒருவர் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள விளம்பரங்களின் பின் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஏற்கவே வெற்றிபெற்றுவிட்டார்.

ஏ.எஸ்.பி.லியனகே என்ற மேற்படி தொழிலதிபர் கொழும்பில் உள்ள ஆங்கில பத்திரிகைகள் சிலவற்றில் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் வெளியிட்டுள்ள விளம்பரத்தின் காரணமாகக் குறைந்தது 50 வாக்குகளாவது புஷ்ஷிற்கு சாதகமாகக் கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

புஷ் உலக பயங்கரவாதத்திற்கு எதிராக எடுத்த நடவடிக்கை இலங்கையிலும் பிரதிபலித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள லியனகே அவரது செயலின் காரணமாகவே இன்று இலங்கையில் அமைதி நிலவுவதாகவும் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஒரு பக்க விளம்பரங்களில் புஷ்வெற்றி பெற்றுவிட்டதாக அவருக்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வாக்காளர்களில் இன்னமும் தீர்மானம் எடுக்காதிருக்கும் வாக்களர்களின் வாக்குகளை புஷ்பக்கம் திருப்புவதற்காக இந்த விளம்பரத்தைத் தாம் வெளியிட்டிருப்பதாகவும் அமெரிக்க குடியுரிமையுடன் இருக்கும் இலங்கையர்களின் 50 பேரின் வாக்குகளாவது அவருக்குச் சாதகமாகக் கிடைத்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ப)

## நூல் விநியோகம்

மில்க்வைற் நிறுவனம் ஐப்பசி வெள்ளியன்று சமயதீட்சை பெறுபவர்களுக்கு 'நித்திய கருமம்' என்னும் சைவ மந்திர நூல்களை இலவசமாக வழங்கவுள்ளது. சமய தீட்சை வழங்கும் ஆலயங்கள் சமய நிறுவனங்கள் இந் நூல்களை காங்கேசன் துறைவீதியில் அமைந்துள்ள மில்க்வைற் அலுவலகத்தில்பெற்று வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

## சைவ நெறித்தேர்வு

யாழ்ப்பாணம்,நவ.4

சைவபரிபாலன சபையால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் சைவ நெறித்தேர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களுக்கான சுட்டெண்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சுட்டெண் கிடைக்கப் பெறாதவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் -

வினாத்தாள் பொதிகளை முன்பு குறிப்பிட்டதற்கமைய தமது இணைப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (10-12)


## உடன் விற்பனைக்கு

Net Cafe இற்குரிய முழுத் தளபாடங்களும் (புத்தம் புதியவை) உடன் விற்பனைக்கு உண்டு.

அத்துடன், இரண்டு தொலைபேசிப் பெட்டிகளும் (Cubicle) (புதியவை) விற்பனைக்கு இருக்கின்றன.

நேரில் வந்து பார்வையிடலாம்.

**தொடர்பு:**

இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 0777 283824, 021 222 3729 (சி-38619)(33-43-11-18)


## துயர்பகிர்வு

எமது பள்ளி முதல்வர் திரு.க.கனகசிங்கம்
அவர்களது உடன்பிறப்பு கணேசம்மாவின்
வாழ்க்கைத்துணைவர்

### க.பேரின்பநாதன்

ஜேர்மனியில் இயற்கையெய்தினார். அவரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

பள்ளிக்குழுமம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
(38279)(34-11-18-33)

## விழிநீர் சொரிய அஞ்சலிக்கிறோம்



எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும்
ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்டத்தின்
முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான

**அமரர் க.இரத்தினசிங்கம்** அவர்களின்

மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(38283) (33-11-18) புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம். ஊர்காவற்றுறை.

## கட்டாக்காலிகளைப் பிடிக்க மாநகரசபை ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கும், அவற்றை உரியவர்களிடம் மீளளிக்கும்போது தண்டப்பணம் அறவிடுவதற்கும் உரிய நடவடிக்கைகளை மாநகரசபை எடுத்துள்ளது.

கட்டாக்காலி கால்நடைகள் போக்குவரத்துக்கு இடையூறாகவும், விபத்துபோன்ற பல்வேறு சேதங்களை விளைவிப்பனவாகவும், அலைந்து திரிவதாகவும், பலர் மாநகர சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர் என்றும்-

இதனையடுத்தே இன்று வியாழக்கிழமை முதல், இந்நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும்-

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா அறிவித்துள்ளார். (எ-204)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்களான
வே.பொன்னம்பலம், வே.பேரம்பலம் ஆகியோரின்
அன்புத் தாயார்

### திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காணி மாவட்டப் பதிவகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
(38282)(34-33-11-18)

உதவிப் பதிவாளர் நாயகம்,
காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும், சக உத்தியோகத்தர்களும்.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர்களான
வே.பொன்னம்பலம், வே.பேரம்பலம்
ஆகியோரின் அன்புத் தாயார்

### திருமதி
### வேலுப்பிள்ளை செல்லம்மா

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (38281)(34-33-11-18)

மாவட்டச் செயலக
நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

## தமிழ்விழா

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் தமிழ்விழா, நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் கலந்து கொள்வார்.

சிறப்புச் சொற்பொழிவை மக்கள் வங்கியின் காங்கேசன் துறை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி நிகழ்த்துவார்.

(எ-12)

## கண்ணீருடன்...

யாழ். திருமறைக் கலாமன்ற நிர்வாகசபை
உறுப்பினரும், இளையோர் அவைத் தலைவருமான



ஜெயகாந்தனின்
அன்புத் தந்தையார்

### க.இரத்தினசிங்கம்

அவர்களின் மறைவால் துயரமடைந்துள்ளோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதே வேளை, அவரின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (38285) (33-11-18)

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம்.

## படகுக் கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.4

நயினாதீவு - குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடும் படகுகளின் கட்டணம் 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 90 ஆம் ஆண்டுமுதல், படகுக் கட்டணமாக 10ரூபா அறவிடப்பட்டுவந்தது என்றும் -

எனினும் தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு எரிபொருள் விலை அதிகரிப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு கடந்த மாதம் வேலணை உதவி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் - தனியார் படகு உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

(எ-204)

## கண்ணீர் அஞ்சலி



### உயர்திரு. கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(முன்னாள், ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

இளைப்பாறிய ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர் திரு. கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் அனைவரும் துயருற்றிருக்கும் வேளையில் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிக்கழகம்,*
*தீவக வலயக்கல்வி அலுவலகம்,*
*வேலணை.* (C/38691) (33-11-18)

உத்தியோகத்தர்கள்.

## இலங்கை அரசு

### வடக்கு - கிழக்கு மாகாண சபை
### வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
### கடன் இல. 2880 சீ.இ.
### தேசிய போட்டிக் கூறுவிலை கோரல் (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல்
## ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல.ஜே.எவ/நீர்ப்/டீஎஸ்/03 திகதி:04.11.2004

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்புட்ட வழிகாட்டலின் கேள்விகள் கோரப்படுகின்றன.
   ஐ.பி.ஆர்.டி(IBRD) கடன் வசதி ஐ.டி.எ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி
2. மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடியகேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000/= ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடம் இருந்து 06.12.2004 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி, (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பினவரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி/தொலைநகல் இல.021 -222 2632

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 07.12.2004 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின், அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1) ஜே.எவ்/நீர்ப்/டீஎஸ்/03 | சாவகச்சேரி பிரதேச செயலக கட்டட புனர்நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்தல் | 337,000 | 1000 | 2½ மாதம் |

7. கேள்விதாரர்கள் கேள்விதாரருக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 4 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (சி-38690)(34-33-11-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சௌதாமினி பத்மகுமாரன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி தங்கம்மா ரங்கநாதன்

அவர்கள் 02.11.2004 இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.
(38301)(29-43-11-45)

# கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும் இளைப்பாறிய ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய

**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்
ஊர்காவற்றுறை.
(38296)(29-43-11-45)
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்,
மாணவர்கள்.

# கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும் ஊர்காற்றுறை முன்னாள் கோட்டக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளருமான

**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் அனைவரும் மிகுந்த துயருற்றிருப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ நாரந்தனை றோ.க.மகா வித்தி,
ஊர்காவற்றுறை.
(38297)(29-43-11-45)
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர், மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முன்னாள் அதிபரும் ஊர்காவற்றுறை முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியுமான

**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இற்றவனை வேண்டுகின்றோம்.

யா/ கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.,
ஊர்காவற்றுறை.
(38288)(29-43-11-45)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்க
உறுப்பினர்கள், பழைய
மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

### (சீனி மாஸ்ரர்)



**(முன்னாள் அதிபர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி, இளைப்பாறிய - கோட்டக் கல்வி அலுவலர், ஊர்காவற்றுறை)**

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் (இளைப்பாறிய கோட்டக்கல்வி அலுவலர், ஊர்காவற்றுறை) அவர்கள் 2004.11.03 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் பாசமிகு மகனும் செறின் யோகன்னா தர்மபாலி (உபதபாலதிபர் - கரம்பொன் கிழக்கு) அவர்களின் அன்புக் கணவரும் உமையாள் (கனடா), ஜெயக்காந்தன் (3ஆம் வருடம் நுண்கலைத் துறை யாழ்.பல்கலைக்கழகம்), ஸ்ரீகாந்தன் (இறுதி ஆண்டு வணிகத் துறை யாழ்.பல்கலைக்கழகம்), காயத்திரி (லண்டன்), நிரஞ்சினி (கொழும்பு பல்கலைக்கழகம்), ரூபிணி, தயாளினி, உதயகாந், உஷானி, பாலகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோதிமதி, துரைராஜசிங்கம், சரஸ்வதி (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (ஜேர்மனி), திலகவதி, குலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகதீபன் (கனடா), நிஷங்கன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அபிநாத்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை பி.ப.4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பொன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கரம்பொன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.*
(சி-38696)(43-11-45)
தகவல்:
திருமதி S.D.இரத்தினசிங்கம்
(மனைவி)

# மோ.சைக்கிளில் சென்றோரை மோதிவிட்டுத் தப்பிய ஓட்டோ

யாழ்ப்பாணம்,நவ.4

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களைப் பின்னால் வந்த ஓட்டோ மோதி விட்டு ஓடித் தப்பியது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் நல்லூர் அரசடி வீதியில் - ஜனசக்தி சனசமூக நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

கந்தர்மடம் சந்தியில் இருந்து நல்லூர் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த அரியாலையைச் சேர்ந்த தம்பதியினரே இவ்வாறு பின்னால் வந்த ஓட்டோவால் மோதப் பட்டுள்ளனர். இதனால் வீதியில் விழுந்த அவர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

# தேவை

எமக்கு சிட்டை எழுதுநர், காசாளர், தேவை. நல்ல அனுபவம் வாய்ந்தவர் விரும்பத்தக்கது.

**தொடர்பு: ஜனனி நகைப் பூங்கா**
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(38276)

# வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, கச்சேரி ஆகிய பகுதிகளில் சோதிடர் தங்கியிருந்து சோதிடம் பார்ப்பதற்கு அமைவான வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. (முற்பணம் தரப்படும்)

தொடர்புகளுக்கு:-
**K.S. குமாரசாமி**
077 6567580, 024 222 3948
(38298)

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் அருகருகே முறையே 1 பரப்பு 5.38 குளி, 1 பரப்பு 3.22 குளி அளவுகொண்ட இரு காணிகள் வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. விருப்பப்படி சேர்த்தோ தனியாகவோ வாங்கலாம். வீட்டில் திருத்த வேலைகள் உண்டு.

தொடர்பு:-
**28, 4ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**
T.P. 222 5381
(38292)


க.பொ.த, (சா/த) மாணவர்களுக்கான
**முன்னோடிப் பரீட்சை-2004**
கொழும்பு யாழ்ப்பாணம் வடமராட்சி
ஆகிய இடங்களில்
கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட வினாத்தாள்கள்
பதிவுகளுக்கு
1. R.T.R பியூட்டி சென்ரர், பிரதான வீதி, மானிப்பாய்.
2. கிறிஸ்ரல் சென்ரர் (நெல்லியடி)
மேலதிக அனைத்து விவரங்களும் விரிவான விளக்கத்துடன் நாளைய உதயனில்.
தொடர்புகளுக்கு:
மானிப்பாய் றோட்டறிக்கழகம்
0777 677079, 077 3017697
077 3053155 (சி-38697)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
தேவயானி நடித்த
பாரதி (ரீலீஸ)
கா.நே 11.00, 2.30, 6.30, 9.30
(சி-38673)


ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G றெயின்போ காலனி (ரீலீஸ்)
இது ஓர் உண்மைக் கதை
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-38041)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இன்று முதல் அர்ஜுன், லாராதத்தா விவேக் நடித்த
அரசாட்சி
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே)
(C-47740)


நிரஞ்சனாஸ் சங்கானை
ராஜ்கிரன் நடித்த
கொஞ்சிப்பேசலாம் (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
DARE DRVALIN
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்மலர் டயனிசியஸ்

### (பொன்னரியம்)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மலர் டயனிசியஸ் அவர்கள் நேற்று (03.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டயனிசியஸின் (பாற்பண்ணை முகாமையாளர்) மனைவியும் டவ்னி, அன்ரனெற் (ஆசிரியை, யாழ்திருக்குடும்ப கன்னியர் மடம்), நில்மினி இவாஞ்சலீன், பிரியாந்தி மரீனா (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்-முதலாம் வருடம்), தனுஷா செலின் (மருந்தாளர் பியிலுநர் தர்மபுரம்) ஆகியோரின் தாயாரும் பிறேடா (SLMM), ஜெயந்தன் (I.C.R.C.) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - எலிசபேத் ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - எலிசபேத் ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ், நவம் மற்றும் தேவமலர், சந்திரமலர் ஆகியோரின் சகோதரியும் ஜேசுராஜன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் சென்.ஜேம்ஸ் ம.வி.), ஏபிரகாம், பீற்றர், தேவநாயகம் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்றவர்களான பிலோமினா, செபமணி ஆகியோரின் மைத்துனியும் சிசிலியா, லூசியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் சஜிதா, வவியான், செயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.11.2004) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*844/2,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(38291)(43-11-45)
தகவல்:
தெ.ஜெயந்தன்,
(மருமகன்).

## புஸ்பநாதன் சசீதரன்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பநாதன் சசீதரன் 01.11.2004 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

இவர் புஸ்பநாதன் - கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மகனும் வல்வெட்டி, வேவில் மகாலிங்கம் - இராசம்மாவின் மகள் யோகராணியின் அன்புக் கணவரும் நிச்சியின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேவில், வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.*
(38294)(43-11-45)
தகவல்:
S.K.மகாலிங்கம் (மாமா).

## திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா நேற்று (03.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் சரஸ்வதி, அமரர் மகேஸ்வரன், அன்னம்மா, செல்லம்மா, இராசபூபதி, கனகலிங்கம் (ஐயம்பிள்ளை -K.S.K.ரவல்ஸ்), புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர்களான பொன்னையா, கனகம்மா, செல்வநாயகம் (தில்லைநாதன்) மற்றும் கந்தசாமி, பொன்னம்பலம் (பொன்.மதுச்சாலை, கொடிகாமம்), சிவபாக்கியம், தேவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*
(சி.38693)(43-11-45)
தகவல்:
சி.ஐயம்பிள்ளை (மகன்),
ச.பொன்னம்பலம் (மருமகன்)

## தம்பையா வேலாயுதம்

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பையா வேலாயுதம் அவர்கள் நேற்று முன்தினம் (02.11.2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் குஞ்சுப்பிள்ளையின் அன்புக் கணவரும் பகீரதன் (ஆசிரியர்-பாக்கியம் தேசியப்பாடசாலை, மாத்தளை), சுதர்சன் (பொறியியலாளர் - புருணை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சியாமளா, ஜனனி (புருணை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெய்ஷ்ரனின் (புருணை) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110/15,சட்டநாதர் கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(38299)(43-11-45)
தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் அருளம்பலம்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருளம்பலம் நேற்று (03.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும் செல்வராணி துரைராசா (அருமை-நாரந்தனை) கனகாம்பிகை, சண்முகநாதன், Dr.ஆனந்தராசா (U.K.), அருட்சோதி விக்னராசா (அளவெட்டி), கமலாம்பிகை குமாரதாஸ் (சுவிற்ஸர்லாந்து) Dr.அற்புதராசா (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி.*
(38300)(43-11-45)
தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆலோசகர் பதவியை திடீர் இராஜினாமா

அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆலோசகர் அசோக குணசேகர தனது பதவியைத் திடீரென இராஜினாமாச் செய்துள்ளார்.

இதற்கான கடிதம் அவரால் நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் இனந்தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். படுகாயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார். ஆணைக்குழு தீர்மானிதத படி பஸ்சேவைகளின் ஒழுங்கு தொடர்பான நேர அட்டவணையைத் தயாரிக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பஸ் போக்குவரத்துத் தொடர்பாக இவர் பரந்த அறிவைக் கொண்டவராக இருந்தார் என்றும் -

ஆலோசகர் என்ற முறையில் அவர் தொடர்ந்து பணிபுரியமுடியாத காரணத்தால் ஆணைக்குழுவுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் - போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் அமல்குமாரகே தெரிவித்தார். (எ-க)

## பேச்சு நடத்துமாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் அரசியல் குழு, அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப்பயணமும், அப்போது இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைமையை பிரசாரப்படுத்தும் வகையில் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளும் கூட ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது.

இலங்கை அரசுக்கு வருடாந்த உதவித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படவேண்டிய உதவிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கூடி ஆராயவேண்டியுள்ளது. குறிப்பாக இவ்வருட இறுதிக்கு முன்னர் இந்தக் கூட்டம் நடைபெற வேண்டும்.

ஆனால், இலங்கையில் அமைதிப்பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் வரை இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதில்லை என்ற சாரப்பட ஓர் அழுத்தத்தைப் போடுவதன் மூலம், இலங்கை அரசை பேச்சு மேசைக்கு அனுப்புவதற்கு பலவந்தப்படுத்த முடியுமா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆராய்ந்துவருகின்றன எனத் தெரிகின்றது.

இலங்கையின் தற்போதைய மோசமான பொருளாதார நிலைமையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இது போன்ற ஓர் இறுக்கமான நிலைப்பாட்டை தீர்க்கமாக எடுத்தால் அமைதிப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்ற இக்கட்டில் இலங்கை அரசு சிக்கும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (எ-க)

## காத்தான்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்தான்குடியில் கடந்த சில தினங்களாக முஸ்லிம் மத முரண்பாடு காரணமாக இருதரப்பினரிடையே மோதல்கள் இடம்பெற்றுவருகினறன.

ரவூப் மௌலவியின் அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்தவர்களே இப்போது அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வருகின்றனர். வேறுசில ஆயிரக்கணககான மக்கள் காத்தான்குடியில் உள்ள பள்ளிவாசல்களிலேயே தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் அமுல்படுத்தப்பட்டிருந்த 24 மணிநேர பொலீஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுப் புதன்கிழமை காலை 6 மணியுடன் நீக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நேற்றும் அந்தப் பிரதேசங்களில் இடம்பெறாத போதிலும் வழமை நிலை அங்கு இதுவரை திரும்பவில்லை.

கடைகள், வர்த்தக நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள், தனியார்துறை நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருப்பதாகவும், பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-4-6)

## சத்தம் சந்தடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழைக்குச் சென்றார்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை 'கோபால்ட் யுனிட்' இயந்திரம் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அவர் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்களுடன் ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், சுகாதார சேவைகள் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் டாக்டர் தெய்வேந்திரன், புற்றுநோய் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி செல்வி நவமலர் கனகரட்ணம் ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பின்னர் அங்கிருந்து ஆளுநர் பலாலிக்குச் சென்று மீண்டும் கொழும்பு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-4-139)

## ரூ.5000 சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச எழுதுவினைஞர் சேவைகள் சங்கம், முன்னேற்ற சங்கம், அரச அச்சகத் தொழிற்சங்க சம்மேளனம், மாகாணசபை அரச எழுதுவினைஞர் சேவைகள் சங்கம், கூட்டுத்தாபன கூட்டுறவு வர்த்தக சேவையாளர் சங்கம் போன்ற அரச மற்றும் தனியார்த்துறைத் தொழிற்சங்கங்கள் இவற்றுள் அடங்கும்.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவால் உயர்த்து, ரயில்வே அதிகார சபையை திணைக்களமாக மாற்று அத்தியாவசியப் பொருள்களின் விலைக்களைக் குறை, பஸ்கட்டண உயர்வால் வேலைக்குச் செல்லமுடியாதுள்ளத். அரசுக்கு நாம் வாக்களித்து பட்டினியால் சாவதற்கு அல்ல போனற கோஷங்களை எழுப்பிய வண்ணம் அரச தனியார் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டனர். (எ-3-4-6)

## சட்டத்தரணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான வழங்கு விசாரணைகள் நேற்று யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் இடம்பெற்றன.

இவ்வழக்குகளில் முதலாவது எதிர்மனுதரரான கோப்ரல் ராஜபக்ஷ தனது சார்பாக மன்றில் ஆஜராவதற்கு, சட்ட உதவிமன்றச் சட்டத்தரணிகள் உட்பட ஏனைய சட்டத்தரணிகள் எவரும் முன்வர மறுக்கின்றனர் - என்று நீதிமன்றில் தெரிவித்தார். எனவே, தனது சார்பாக சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கு நாளை வெள்ளிக்கிழமைவரை கால அவகாசம் வழங்குமாறு அவர் கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்கு விசாரணைகளை நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைத்தார். அதுவரை எதிர்மனுதாரரை யாழ். சிறைச்சாலையில் கடும் பாதுகாப்புடன் தடுத்துவைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பாக மனித உரிமைக்கும், அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி எம்.எஸ்.ரெமீடியஸீம், பிரதிவாதிகளான முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, அரியாலை இராணுவமுகாம் பொறுப்பதிகாரியகா இருந்த கப்டன் லலித்குமார ஆகியோர் சார்பாக அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை, பாலியல் வல்லுறவு மற்றும் கிருஷாந்தி குமாரசுவாமியின் தாயார், சகோதரர், அயலவர் படுகொலை ஆகிய சம்பவங்கள தொடர்பான வழங்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர் கோப்ரல் ராஜபக்ஷ என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க-4-5)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொண்டார். இறுதியாகக் கிடைத்த முடிவுகளின்படி ஹெறியைவிட புஷ் 35 லட்சம் வாக்குகள் அதிகப்படியாகப் பெற்றிருக்கிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவு சட்டப்பிரச்சினைகளால் நீதிமன்றத்தில் இழுபட்டதுபோல் இம்முறை விவகாரம் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் முடிவுற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-4-6)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் வெளியிட்ட அறிக்கை, நாட்டில் தலை தூக்கிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாத நிலையில் சர்வதேச சதிவலைப் பின்னலுக்குள் சரணாகதி அடைந்திருப்பதாக ரணில் அரசைக் கடுமையாகச் சாடியது. இதனால் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் நிகழ்ந்து வந்த சமாதான முயற்சி, சர்வதேச மத்தியஸ்தத்திற்கு திசைதிருப்பம் செய்யப்பட்டுள்ளது" - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டதைச் சுட்டிக்காட்டினார் மதியுரைஞர் பாலசிங்கம்.

கூட்டாட்சி முறையை ஆராய்ந்து பார்ப்பது என்ற தீர்மானம் சம்பந்தமாகக் குறிப்பிடும் ஒஸ்லோப் பிரகடனம் எதுவுமில்லை என்பதை பேராசிரியர் பீரிஸ் ஒப்புக்கொண்டமை குறித்து அவரைப் பாராட்டிய பாலசிங்கம், மூன்றாவது சுற்றுப்பேச்சு முடிவில் நோர்வே அரசு வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒரு பிரகடனமாகப் பெரிதுபடுத்தப்பட்டு, வித்தியாசமான விளக்கங்களும் அளிக்கப்பட்டன - என்றார்.

"25 நவம்பர் 2002 இல் ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இப்பிரகடனம் சமாதானப் பேச்சுக்கு ஆதரவு தெரிவித்ததுடன், வன்முறையைத் தவிர்த்து சமாதான வழிமூலம் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இரு தரப்பினரும் தொடர்ந்து கடும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. ஒஸ்லோ, டோக்கியோ மாநாட்டுப் பிரகடனங்களையும், மூன்றாம் சுற்றுப்பேச்சு தீர்மானங்களைக் கொண்ட பத்திரிகை அறிக்கையையும் அடிப்படையான ஆவணங்களாக முன்வைதது, இவற்றிலிருந்து அரசியல் தீர்வுக்கான கட்டமைப்பு உருவாகிவிட்டதென ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் வாதிடுவது அபத்தமானது. ஏற்றுக்கொள்ள முடியாதது. உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பிரகடனங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வின் வரையறைகளை முன்கூட்டியே நிச்சயித்து விடமுடியாது. இனப்பிரச்சினையானது அந்நிய சக்திகளின் அழுத்தமும், தலையீடும் இன்றி சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பேசித் தீர்க்கவேண்டியதொன்றாகும்"- என்று விளக்கினார் பாலசிங்கம். (எ-க)



## கண்ணீர் அஞ்சலி

யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை
முன்னாள் அதிபரும் ஊர்காவற்றுறை
முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான

### கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் மிகுந்த துயருற்றிருக்கும் வேளையில், அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறைக் கோட்ட, கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
(38293) அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயலெட்சுமி புவனேந்திரன் (லதா)

61, கோயில் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாக் கொண்ட திருமதி ஜெயலெட்சுமி புவனேந்திரன் அவர்கள் நேற்று (03.11.2004) புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் புவனேந்திரன் (ரவி - சடாட்சரம் அன் சன்ஸ், நகைத் தொழிலகம்) அன்பு மனைவியும் பு.நிவேஜிதனின் (9ஆம் ஆண்டு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) பாசமிகு தாயாரும் தர்மலிங்கம் (மில்க்வைற்) ராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. புவனேந்திரன்
(ரவி - கணவர்).

(38303)(43-29-11-45)

### திருமதி கனகநாதன் தவயோகலட்சுமி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகநாதன் தவயோகலட்சுமி நேற்று (3.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பிரகாஷ் (மாவீரர் சந்திரன்) மற்றும் பிரகாமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரமேசின் மாமியும் சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும் நல்லதம்பி - நாகமுத்துவின் அன்பு மருமகளும் நித்தியலட்சுமி (ஜேர்மனி), சகுந்தலாதேவி, தியாகேசன் (இத்தாலி), வாகேசன் (இத்தாலி), பாக்கியலட்சுமி (லண்டன்), விஜயலட்சுமி (பிரான்ஸ்), ரமேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (4.11.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பரந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*134, குமரபுரம்,*
*பரந்தன்.*

தகவல்:
மு.தங்கராசா
(மைத்துனர்).

(38302)(29-11-45)


**விக்னா கல்வி நிறுவனம்**

பொருளியல்
திரு. உதயன்
பிரிவு - 3
**A/L 2006**
7.30 சனிக்கிழமை
**A/L 2005**
வினாவிடை வகுப்பு
3.45 சனிக்கிழமை
ஆரம்பம்: 06.11.2004
(38256)

**கணனி வாய்ப்புகள் எண்ண முடியாதவை**
**நாங்கள் அதற்கு சரியான வழிகாட்டுபவர்கள்**
**UNIT**
கொழும்பு விலையில்
கணனிகள்
எமது விளம்பரத்தை 04ஆம் பக்கம் பார்க்கவும்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**14-11-2004**

இக்கல்வியாண்டு 2003/2004 இற்குரிய இறுதிப் பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப்பிரிவில் அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி38573)(30-11-45-29)

**தீபாவளி வாழ்த்துக்கள்**

ஈழ மண்ணில் வாழும் எம்மின மக்களுக்குத் தீபாவளி நல்வாழ்த்துக்களை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.





தென்னிந்தியாவில் இருந்து
ஐந்தாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிட கலையில் புகழ் பெற்ற சிவபால சோதிடர்
**ராஜகுருசாமி** அவர்கள்
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புதுப்பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி வருகைதந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9.00 மணி - மாலை 6.00 மணி
கைரேகை மட்டும் காலை 9.00மணி முதல் 1.00 மணிவரை
★ ஜாதகம் ★ கைரேகை ★ எண் கணிதம் ★ பெயர் ராசி ★ திருமணப் பொருத்தம் இவற்றில் பல வருட அனுபவம்பெற்றவர்.
(38625)(30-11-45-29) **ராஜகுருசாமி**
மிலன்ஸ் மஷ்ரி கொம்பிளக்ஸ்
**60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA. ☎ 5867**

**மீண்டும் செல்வா வோச் வேக்ஸ் ஆரம்பம்**
★ தரமான மணிக்கூட்டு பற்றறிகள் மற்றும் Strap (பட்டிகள்) என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.
★ சகலவிதமான மணிக்கூடுகளையும் திருப்திகரமான முறையில் திருத்த வேலைகள் செய்துகொள்ளவும்.
சிறப்புடன் திகழ்ந்தவர்கள்தான்
செல்வா வோச் வேக்ஸ் ஸ்தாபனத்தார்
அவர்கள் யாழ். மக்களுக்கு தமது சேவையை வழங்கும் நோக்கில் மீண்டும் 3.11.2004 புதன்கிழமை முதல் இல.299, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஸ்தாபனத்தை இயங்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றார்கள்.
**செல்வா வோச் வேக்ஸ்**
இல.299, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-38694)(11-45-29)

**D.C.M.**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
**I ST IN COM., G.A.Q 2003,2004**
**மீட்டல் வினாவிடை வகுப்புகள்**
பொருளியல் : வரதராஜன்
கணக்கியல : முகுந்தன்
வணிகக்கல்வி : உமாகாந்
கணிதம் : அம்பி
ஆங்கிலம் : நிசாந்தன்
இந்துநாகரிகம் : ஸ்ரீஸ்
ஆரம்பம் 06.11.2004 சனி 8.00 (மு.நே)
(38243)(32-11-45-29)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.